E-ISSN: 2584-167X

International Multidisciplinary Conference on

Sustainable Development Goals and Global Humanity

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளும் உலகளாவிய மானுடமும்

23rd - 26th January 2026

Hanoi, Vietnam

Organized by

P.G. & Research Department of Tamil,

Bishop Heber College (Autonomous, A++)

Tiruchirappalli - 620017

Tamil Nadu, India.

Vietnam Tamil Sangam

Reg. No. UTS/WD111

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1- January 2026

SUSTAINABLE DEVELOPMENT GOALS

1. **SDG Goal 1** - வறுமை இல்லாதநிலை **(No Poverty)**
   2030க்குள் அனைத்து வடிவங்களிலான வறுமையை முழுமையாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
2. **SDG Goal 2**- பசியற்ற உலகம் **(Zero Hunger)**
   உணவு பாதுகாப்பு, நல்ல ஆரோக்கியம், உணவுப்பொருட்களை மேம்படுத்தி பசியற்ற உலகத்தை உருவாக்குதல்.
3. **SDG Goal 3 - (Good Health and Well-being)**
   அனைவருக்கும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தி. நோய்களைத் தடுக்கும் செயல்பாடுகள்.
4. **SDG Goal 4- (Quality Education)**
   அனைவருக்கும் உடன்பிறப்புரிமையாக தரமான கல்வியைப் பெற்றுத்தருதல்.
5. **SDG Goal 5 - (Gender Equality)**
   பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சம உரிமைகளை வழங்குவதன் மூலம் பாலினச் சமத்துவத்தை மேம்படுத்துதல்.
6. **SDG Goal 6**- தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் **(Clean Water and Sanitation)**
   அனைவருக்கும் தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்.
7. **SDG Goal 7**- குறைந்த செலவில் சுத்தமான சக்தி **(Affordable and Clean Energy)**
   ஆற்றல் வளங்களின் அதிநவீன பயன்பாட்டை உறுதிசெய்து, குறைந்த செலவில் மக்களுக்கு வழங்குதல்.
8. **SDG Goal 8** - வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி **(Decent Work and Economic Growth)**
   அனைவருக்கும் உழைப்புக்கான சமவாய்ப்புகள் மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்.
9. **SDG Goal 9** - தொழில், புதுமைகள் மற்றும் அடித்தள வசதிகள் **(Industry, Innovation, and Infrastructure)**
   தொழில்நுட்பம், புதுமைகள் மற்றும் அடித்தளங்களை மேம்படுத்துதல்.
10. **SDG Goal 10** - சமநிலையற்றத்தை குறைத்தல் **(Reduced Inequalities)**
    உள்ளூர் மற்றும் உலகளவில் உள்ள பொருளாதார மற்றும் சமூக சமநிலையற்றத்தை குறைத்தல்.
11. **SDG Goal 11 - (Sustainable Cities and Communities)**
    நவீன மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஏற்ப நகரங்கள் மற்றும் சமூகங்களை உருவாக்குதல்.
12. **SDG Goal 12** - பொறுப்புடன் நுகர்வு மற்றும் உற்பத்தி **(Responsible Consumption and Production)**
    சுற்றுச்சூழலுக்கேற்றபடி, பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வை ஊக்குவித்தல்.
13. **SDG Goal 13**- காலநிலை மாற்றத்தின் எதிரொலிகள் **(Climate Action)**
    காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது.
14. **SDG Goal 14** - கடலுக்கடியில் உள்ள உயிர்கள் **(Life Below Water)**
    கடல் நீர்வளம் மற்றும் கடல் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
15. **SDG Goal 15** - பூமியின் மீது உள்ள உள்ள உயிர்கள் **(Life on Land)**
    நிலத்தின் வாழ்க்கை வளங்களை பாதுகாத்து, வனங்கள் மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பது.
16. **SDG Goal 16** - சமாதானம், நீதி மற்றும் பலமான நிறுவனங்கள் **(Peace, Justice and Strong Institutions)**
    அனைவருக்கும் சமநிலை, நீதி மற்றும் பலமான நிறுவனங்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்.
17. **SDG Goal 17** - சர்வதேசக் கூட்டமைப்புகளை உருவாக்குதல். **(Partnerships for the Goals)**
    இந்தக் குறிக்கோள்களை அடைய சர்வதேசக் கூட்டமைப்புகளை உருவாக்கி, அனைவருக்கும் ஆதரவு வழங்குதல்.

ISSN 2584-167X
9 772584 167004

E-ISSN: 2584-167X

International Multidisciplinary Conference on

Sustainable Development Goals and Global Humanity

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளும் உலகளாவிய மானுடமும்

23rd - 26th January 2026
Hanoi, Vietnam

Organized by

P.G. & Research Department of Tamil,
Bishop Heber College (Autonomous, A++)
Tiruchirappalli - 620017
Tamil Nadu, India.

Vietnam Tamil Sangam
Reg. No. UTS/WD111

Academic Research News
Peer-Reviewed Journal
CP - Volume 2, Issue 1- January 2026

Be Eco-friendly

Title Verso

Journal title : **Academic Research News**

Abbreviated key-title: Acad. Res. News

E- ISSN Number : **2584-167X**

Editor-in-Chief : **Mrs. A. Gomathi**

Publication frequency: Bi-Annual (Calendar Cycle - June and December)

Volume/Issue Type : **Conference Proceedings - Volume 2, Issue 1 – January2026**

Place of Publication : **Virudhunagar**

Start of Publication : **June 2023**

Paper Size (Format) : **Digital A4 Size**

Medium of Publication: E-version

Subject : **Multidisciplinary Studies**

Language : **Tamil, English**

Access Type (URL or DOI) : **Gold OA, Online, Indexed long time in Internet Archive**

Subscription Type : **APC**

Publisher : **Maheswari Publishers,** (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN-32-0003213)

Publisher Website : https://pandianeducationaltrust.com/

Journal Site : https://pandianeducationaltrust.com/academic-research-news.html

Pandian Educational Trust supports the SDG Goals and is a member of the UN SDG Publisher compact.

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

Academic Research News is *a Peer-Reviewed Journal* (E-ISSN: 2584-167X) published **Bi-yearly (June – December)** which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. **Academic Research News** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of academic news related to research, indexing, ethical publishing and other related news. Research through this academic medium motivates all aspects of the main and inter-disciplines of the core area of study with authentic e-publication. Making Internationalization of **Academic Research News** in the globalized world aids the scholarly community to gather knowledge on Academic Research in all fields of learning. The impudence and revelation of academic research on the internet could foster green printing and open access nature in the domain of research. All of these motivate the best distribution of research that produces positive outcomes for the betterment of research and education and the unification of the people in our world. In achieving this aim, our journal **Academic Research News** has been created**.**

Disclaimer

Academic Research News E-ISSN: 2584-167X is committed to research Ethics and considers plagiarism as a crime done to the original author. So, the authors are advised to follow academic ethics with respect to acknowledgement of quotations from other scholarly works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions must be original, must accompany the declaration form stating the research paper as an original work, and have not been published elsewhere for any academic or research purpose. The contributor will be liable for such lapses on any legal issues and publication ethics. **Contact:** president @pandianeducationaltrust.com for other information. For Institutional Subscription contact the publisher.

Message from the Editor-in-Chief

Academic Research News is a Peer Reviewed Journal which is committed to academic research and welcomes academicians, scholars and students all over the world who advance their status of academic careers and society through their scholarly ideas in all fields of academic studies. Research is to establish, substantiate facts, restate previous works and resolve issues. An active venture to endow a cogent approach to these types of educational reformations through academic research has become the central intent of the journal to bring down scholarly articles to the academic world. This is the **ARN Conference Proceedings** section, an initiative to promote quality conference papers under the name of the journal.

Publisher Contact:
Maheswari Dharmalingam
Pandian Educational Trust (TN-32-0003213),
Maheswari Publishers, (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN-32-0003213**)**
3/350, Veterinary Hospital Back Side,
Virudhunagar- 626001, Tamil Nadu, India.
Mobile: +91 8526769556
email: arnmultijournal@gmail.com

Copyright © 2026 – Authors'

Academic Research News E-ISSN: 2584-167X is an open-access journal and the PDF copy can be reused within the terms of the CC BY license https://creativecommons.org/licenses/by/4.0/. Think before you print so that you can save trees and the environment.

Be Eco-friendly

Editorial Board

Mrs. A. Gomathi, (Editor-in-Chief)
Assistant Professor of Commerce (S/F),
Kamaraj College, Thoothukudi, Tamil Nadu, India.
Email: editorarn@pandianeducationaltrust.com
Profile: https://kamarajcollege.ac.in/commerce/

Dr. M. Annalakshmi,
Assistant Professor of Mathematics,
Department of Mathematics,
VHNSN College,
Virudhunagar - 626001,
Tamil Nadu, India.
Email: annalakshmi@vhnsnc.edu.in
Profile: https://www.vhnsnc.edu.in/dl.php?fid=AMAT7&id=15

Dr. G. Rajesh Kumar,
Assistant Professor,
Department of English,
Directorate of Distance Education,
Madurai Kamaraj University,
Madurai.
Email: drrajeshmkudde@mkuniversity.ac.in
Profile Page: https://mkuniversity.ac.in/dde/faculty.php

Mrs T. Jeyappradha,
Assistant Professor of Management,
NMSSVN College,
Nagamalai, Madurai. Tamil Nadu, India.
Email: jeyappradha@nmssvnc.edu.in
Profile: https://nmssvnc.edu.in/academics/departments/department-of-business-administrationaided/

Dr. D. Maheswari,
The President,
Pandian Educational Trust, Virudhunagar.
Tamil Nadu, India.
Email: president@pandianeducationaltrust.com
Profile: http://pandianeducationaltrust.com/trustees.html

Dr. S. Prema
Assistant Professor of Tamil,
PSGR Krishnammal College for Women,
Coimbatore - 641004,
Tamil Nadu, India.
Email: prema@psgrkcw.ac.in
Profile: https://psgrkcw.irins.org/profile/135952

Associate Editors

Dr. M. Vinoth Kumar,
Head i/c & Guest Lecturer,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thoothukudi District,
Tamil Nadu, India.
Email: vinothkumar@pandianeducationaltrust.com
Profile: https://sites.google.com/view/msuccenglish/home

Dr. S. Kulandhaivel,
Head & Assistant Professor,
Department of English,
Ganesar Arts and Science College,
Melasivapuri-622403,
Pudhukkotai District,
Tamil Nadu, India.
Email: english.kulandhai@gmail.com

Dr. B. Senthil Kumar,
Guest Lecturer,
Department of English,
Alagappa Govt. Arts College,
Karaikudi, Sivaganga-630003,
Tamil Nadu, India.
Email: skbosesk@gmail.com

Mr. B.Thangamarimuthu,
Guest Lecturer in English,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thoothukudi District,
Tamil Nadu, India.
Email: goldchangepearl@gmail.com
Profile: https://sites.google.com/view/msuccenglish/home

ARN Conference Proceedings

International Multidisciplinary Conference on

Sustainable Development Goals and Global Humanity

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளும் உலகளாவிய மானுடமும்

P.G. & Research Department of Tamil,
Bishop Heber College (Autonomous, A++)
Tiruchirappalli - 620017
Tamil Nadu, India.

23rd - 26th January 2026
Hanoi, Vietnam

CP - Volume 2, Issue 1 – January 2026

Editorial Board

Mrs. A. Gomathi, (Editor-in-Chief)
Assistant Professor of Commerce (S/F),
Kamaraj College, Thoothukudi, Tamil Nadu, India.

Guest Editor

Dr. P. Rajkumar
Associate Professor and Head
P.G. & Research Department of Tamil
Bishop Heber College (Autonomous, A++)
Tiruchirappalli - 620017
Tamil Nadu, India.

Be Eco-friendly

Editorial Statement of the Peer Review Process

Dr. P. Rajkumar, Associate Professor and Head**,** P.G. & Research Department of Tamil
Bishop Heber College (Autonomous, A++), Tiruchirappalli - 620017, Tamil Nadu, India.
Email: rajkumar.tm@bhc.edu.in

Corresponding Editor: Dr. P. Rajkumar: rajkumar.tm@bhc.edu.in

In preparing this volume of **CP - Volume 2, Issue 1, January 2026 in *ARN Conference Proceedings*** for the **International Conference on "Sustainable Development Goals and Global Humanity / நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளும் உலகளாவிய மானுடமும்",** the editors affirm that every manuscript underwent peer review process. The expert reviewers assessed each submission under the academic and scientific standards upheld by the journal.

Peer Review Details:

Review type

- **International Conference Abstracts:** Nil
- **International Conference Full Papers:** Editorial review
- **Submission Platform:** arnmultijournal@gmail.com
- **Total Submissions Reviewed:**
- **Submissions Accepted:** 17
- **Acceptance Rate:** 100%
- **Average Reviews per Submission:** 2
- **Total Reviewers Involved:** 2

Overview of the Review and Editorial Process:

The authors submitted the papers to the conference committee. Each paper was evaluated on criteria developed by the conference organizing committee. These criteria focused on two main aspects: (a) whether the submission presented is a concrete idea with novelty aligned to the aim and scope of the conference (b) whether it demonstrated assessable impacts on student learning, faculty learning or teaching practices. They were also checked for Plagiarism and AI content and approved for review. The papers that fulfil both criteria were selected for publication with the reviewers' strong agreement in their evaluations. These papers were evaluated by the reviewers of the board, and the authors revised their work in response to detailed feedback.

Conflict of Interest: The authors confirm that there are no conflicts of interest.

Disclaimer: All opinions, conclusions and descriptive data presented in the articles are the sole responsibility of the respective authors and contributors. The publisher or editors are not liable for any harm or loss arising from the use of any ideas, methods, or products mentioned in this content. In case of any infringement, the articles will be retracted from the journal.

Date of Publication: 23 January 2026

Editorial Details: Dr. P. Rajkumar, *Editorial Statement of the Peer Review Process*. CP - Volume 2, Issue 1, January 2026 in *ARN Conference Proceedings* 2026.

License: © **2026** for authors. Published by ARN. This open-access publication is distributed under the terms of the Creative Commons Attribution License (CC BY 4.0 Attribution 4.0 International) https://creativecommons.org/licenses/by/4.0/

Be Eco-friendly

Contents

Sl. No	Title/Author Name	Page No
1.	மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல் Lifestyle of Persons with Disabilities முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க் / Dr. Alexis Devaraj Saint Mark	1
2.	*வற்றும் ஏரியின் மீன்கள்* சிறுகதையை முன்னிறுத்தி நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் Sustainable Development Goals in the Context of the Short Story *"Vatrum Eriyin Meengal"* வே. காந்திமதி / V. Gandhimathi முனைவர் இராம. பரிமளம் / Dr. R. Parimalam	7
3.	வைரமுத்துவின் *மூன்றாம் உலகப்போர்* காட்டும் சமுதாய சிந்தனைகள் Social Reflections Presented in Vairamuthu's *Third World War* வி. கிருஷ்ணமூர்த்தி	14
4.	தெற்காசியக் குழந்தைகளின் தொடர்புத்திறன்: உளவியல், நரம்பியல் மற்றும் சமூக கோணங்களில் ஆழமான ஆய்வு A Comprehensive Psychological–Neurocognitive Analysis on Communication Development in South Asian Children திருமதி. மதிவதனி திருமலை / Mrs. Mathivathani Thirumalai	24
5.	வளங்குன்றா வளர்ச்சி நிலைக்குத் திருப்பாவைத் தத்துவங்கள் Thiruppavai Philosophies towards Sustainable Development முனைவர் இராம. பரிமளம் / Dr. R. Parimalam	29
6.	Sustainable Futures through Literature, Culture and Innovation: A Multidisciplinary Dialogue on SDGs Dr. Arockiados Esther Shanthini	36
7.	Application of Microbeads Biofertilizers to Increase Microbial Population and Reduce Chemical Fertilizer Needs on Pineapple Plants Betty Natalie Fitriatin[1]*, Nabila Syifa Ariani[2], Mieke Rochimi Setiawati[1], Anne Nurbaity[1], Ania Citra Resmini[1], Ratdiana[3], Fransiska Dina Marlinawati[3]	40
8.	An Exploration of Emotional Ecology for Sustainable Action in Amitav Ghosh's *The Hungry Tide* and Ambai's *In a Forest, A Deer* K. Devi Meenakshi Karthigeyan, Dr. T. Senthil Veera Kumari	53
9.	Beyond Melange: *Dune*'s Critique of Energy Colonialism and the Imagination of Sustainable Futures Mr. S. John Joshua, Dr. K. Prem Kumar	58
10.	Dignity at Work: Integrating Christian Social Teachings and Sustainable Development Goals in the Labour Landscape of Sri Lanka Rev. Prof. J.C. Paul Rohan	62

11.	**Selective Inheritance: Exploring the Structures of Cultural Reproduction in Colson Whitehead's *Sag Harbor*** **Pon Caleb**	**76**
12.	**An Analytical Study of Virginius Xaxa's Perspectives on Tribal Education as a Pathway to a Sustainable Future** **V. Pooja**	**80**
13.	**Ecological Sustainability Beyond The Stripes: Construing Anushka Ravishankar's *Tiger On A Tree*** **Dr. G. Priya**	**87**
14.	**Ethical Development through Story: Remapping Guilt in Kaled Hosseini's *The Kite Runner*** **Dr. A. Sheeba Princess**	**92**
15.	**Sustainable Futures Through Literature, Culture and Innovation: A Multidisciplinary Dialogue on the Sustainable Development Goals** **Dr. K Sornambiga**	**97**
16.	**Reclaiming Mother Earth through the Feminist Visions of Sukirtharani and Margaret Atwood** **Dr. V. Umamageswari**	**102**
17.	**Navigating Double Colonization: Women's Agency and Resistance in Attia Hossain's Sunlight on a Broken Column** **S. Victoria Alan**	**108**

நமது உலகை மாற்றும் 17 இலக்குகள்

17 Goals to Transform Our World

Be Eco-friendly

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல்

Lifestyle of Persons with Disabilities

முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க், தமிழ்ப் பேராசிரியர்,
41 & 43, ரூ செயின்ட் டொமினிக், 75007 பாரிஸ், பிரான்ஸ்.
Dr. Alexis Devaraj Saint Mark, Tamil Professor, 41 & 43, Rue St. Dominique, 75007 Paris, France.

Abstract

Among the countries of the European continent, France—and its capital city Paris—are regarded respectively as a nation and a city abundant in historically significant sites, centers of artistic excellence, and prominent tourist destinations. However, the fact that France stands as one of the most important nations in the world to have raised its voice for humanitarian values, and indeed as the first European nation to do so, has remained relatively unknown within the scholarly community. At the Château de Chaillot, France has engraved in golden letters for the world to witness the Universal Declaration of Human Rights in the year 1948 CE. Jean-Jacques Rousseau, by birth a Swiss national, published from France his work The Social Contract, in which he articulated the three great guiding principles as national declarations of France: Freedom (Liberty – Liberte), Equality (Egalite), and Fraternity (Fraternite). These principles continue to endure even in the contemporary period. Not only in France, but also in many countries across the world, these guiding ideals are followed—both at the level of policy and practice—according to their respective political contexts. Although the Tamils had long ago proclaimed ideals such as "Yaathum Oore Yaavarum Kelir" (Every place is our home; everyone is our kin) and "Pirappokkum Ellaa Uyirkkum" (All lives are equal by birth), history reveals that it is the French people and the French nation who have actively implemented these ideals in practice. In later times, France has also followed, as an unwritten rule, a fourth guiding principle known as Laïcité*, which signifies religious harmony and secularism. France is recognized as a nation that upholds individual freedom, an egalitarian outlook, inclusive social ethics that embrace all as kin, and freedom of religion. These characteristics distinguish its national identity from that of many other countries in the world. In a nation like France, where multiple languages, ethnicities, nationalities, cultural elements, lifestyles, regional identities, and religious perspectives coexist abundantly, the French state structurally affirms that all who live there are equal, and its laws reinforce this principle. Consequently, France adopts a common political stance toward native-born French citizens, naturalized citizens of other countries, and immigrants and functions as a welfare state committed to safeguarding public well-being. Within this broader context, the lifestyle and lived realities of persons with disabilities residing in France are examined and analyzed in the following study.*

Keywords: Persons with Disabilities, Lifestyle, France.

ஆய்வு முன்னுரை

ஐரோப்பா கண்டத்தில் உள்ள நாடுகளுள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும், கலைத் திறன் வாய்ந்த இடங்களும், சுற்றுலா இடங்களும் சிறந்த நாடாக – நகரமாக முறையே பிரான்சும் – பாரிசும் கருதப்படுகின்றன. மனிதநேயத்திற்காக உலகில் குரல் கொடுத்தொரு மிக முக்கியமான நாடாகவும் – முதல் ஐரோப்பிய நாடாகவும் பிரான்சு

விளங்குவதை அறிவார்ந்த சமூகம் இதுவரை அறியப்படாததொரு செய்தியாகவே இருந்து வருகின்றது. 'சைலோட் அரண்மனையில்' என்ற இடத்தில் பிரான்சு பொன் னெழுத்துகளால் மனிதநேய அறிவிப்பினைக் கி.பி. 1948 ஆம் ஆண்டு உலகறியுமாறு பொறித்து வைத்துள்ளது. பிறப்பால் சுவீடன் நாட்டைச் சார்ந்த 'ழீன் ழாக் ரூசோ' என்பார் பிரான்சிலிருந்து வெளி யிட்ட தன்னுடைய 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலில் 'விடுதலை' (சுதந்திரம் – லிபர்தே – Liberte), ஒத்துரிமை (சமத்துவம் – எக்காலிதே – Equalite), தோழமை (சகோதரத்துவம் – Fraternite) ஆகிய முப்பெரும் தாரக மந்திரங்களைப் பிரான்சு நாட்டின் பிரகடனங்களாக வெளிப்படுத்தினார். அது இன்றைய காலக் கட்டத்திலும் நீட்சி கண்டுள்ளது. பிரான்சு நாடு மட்டுமன்றி, உலக நாடுகள் பலவற்றிலும் இத்தாரக மந்திரங்கள் கொள்கை அளவிலும் – செயற்பாட்டளவிலும் தத்தம் அரசியல் சூழமைவுகளுக்கு ஒப்பப் பின்பற்றுகின்றன. உலகிலேயே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றும் தமிழர் முன்னரே முன்மொழிந்து சென்றாலும் நடைமுறையில் – செயற்பாட்டளவில் அதைப் பின்பற்றுபவர்கள் பிரெஞ்சியர்கள்; பிரான்சு நாடு என்பது வரலாற்றில் வெளிப்படையாக அறிய முடிகிறது. பிற்காலத்தில், 'சமய நல்லிணக்கம்' என்று பொருள்படுகின்ற 'லெ எய்தே' (L'Aiade) நான்காவது தாரக மந்திரத்தை எழுதப்படாத விதியாகப் பிரான்சு பின்பற்றுகிறது என்பதும் தெரியவருகிறது. தனி மனிதனின் தனிப்பட்ட சுதந்திரத்தையும், சமத்துவக் கண்ணோட்டத்தையும் – வாழ்வியலையும் - அனைவரையும் உடன் பிறப்பாக வரிந்து கொள்ளுகின்ற மனப்பான்மையும், சமயச் சுதந்திரத்தையும் கொண்ட நாடாக அறியப்படுவது அந்நாட்டின் இருப்பினை உலக நாடுகள் பலவற்றிலிருந்து பிரித்தறிந்து-வேறுபடுத்தி இனங்காண உதவுகின்றது. பல மொழிகள், இனங்கள், நாடுகள், கலாச்சாரக் கூறுகள், வாழ்வியல் கட்டமைப்புகள், வட்டாரக் கூறுகள், சமயக் கண்ணோட்டங்கள் இவை போன்றவை சிறந்ததொரு நாடாக அறியப்படுகின்ற பிரான்சில் வாழுகின்ற அனைவரும் சமம் என்பதைப் பிரான்சு அரசு கட்டமைக்கிறது; சட்டங்களும் அதை வலிமைப்படுத்துகின்றது. எனவே, பிரான்சில் பிறந்து வாழுகின்ற பிரெஞ்சு நாட்டினருக்கும், பிரெஞ்சு குடியுரிமை பெற்ற ஏனைய பிற நாட்டினருக்கும், குடியுரிமை பெற பற்பல நிலைகளில் வாழுகின்ற பிற நாட்டு 'வந்தேறிகளுக்கும்' (Etranger) பொதுவானதொரு அரசியல் நிலைப்பாட்டைப் பிரெஞ்சு நாடானது கைக்கொண்டு 'குடிநலன் பேணும் அரசாக' (Welfare State) திகழுகின்றது. இத்தகைய பின்னணியில் பிரான்சில் வாழுகின்ற மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியலானது பின்வருமாறு ஆராய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்புச்சொற்கள்: மாற்றுத் திறனாளி, வாழ்வியல், பிரான்சு.

தமிழ் இலக்கியங்களில் மாற்றுத் திறனாளிகள் குறித்த பதிவுகள்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" என்பது பொதுவாக மாந்தர் பொதுப் புத்தியில் அறிந்ததொரு சொலவடையாக விளங்குகிறது. ஆனால், ஔவையார் "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"[1] என்று மானிடப் பிறப்பினை, அரியப் பிறப்பாகக் கவனப்படுத்துவதையும் அப்பிறப்பினை,

"கூன் குருடு செவிடு பேடு நீங்கிப்
பிறத்தல் அரிது"[2]

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

என்றும் பிரித்தறிந்து வேறுபடுத்திக் காட்டுவது மாற்றுத் திறனாளிகளின் இருப்பினைச் சமூகக் கட்டமைப்பில் விளக்கமாக அறியத் துணை செய்கின்றது. மாற்றுத் திறனாளிகளுக்காக முதலில் குரல் கொடுத்தவரும் அவர்களை ஒருவகையான குற்றப் பரம்பரையினராகவும் – பழிப்புரைக்காகவும் எள்ளி நகையாடுகின்ற இருபதாம் நூற்றாண்டு வரையிலான தமிழர்தம் பதிவுகள் மூலமாக நன்கறிய முடிகின்றது.

சங்க காலத்தில் முடத்தாமக் கண்ணியார், நாயன்மார்களுள் திருநாளைப் போவார் நாயனார், மணிமேகலையில் சாத்தனார் காட்டும் பித்தன், வில்லிபாரதத்தில் வில்லிப்புத்தூழ் ஆழ்வார் காட்டும் பிருகந்நளை என்ற பேடி வடிவந் தாங்கிய அர்ச்சுனன், கம்பர் சுட்டும் கூனி; குகன், இரட்டைப் புலவர்கள் போன்றோர் தமிழ் இலக்கியப் பொது வெளியில் சுட்டத்தக்க மாற்றுத் திறனாளிகளாகத் திகழ்வதைக் கண்டறிய முடிகின்றது. வேதநாயக முதலியார் தன் நீதி நூலில், "முடவரே நடக்கினும் மூர்ங்கையன் பேசினும்"[3] என்று அமைகின்ற பாடலில் நடக்க முடியாதவர்களை 'முடவர்' என்றும், வாய்ப் பேச முடியாதவர்களை 'மூர்ங்கையர்' என்றும் சுட்டுவதைக் கண்டறிய முடிகிறது. இருந்தும், தமிழர்தம் வழக்காற்றில் 'முடவர் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டக் கதை', 'ஊமை கண்ட கனவு', 'நொண்டிக்கு நூற்றி எட்டுக் கொழுப்பு; ''செவிடன் காதில் ஊதிய சங்கு' என்பனவாக நிலவுகின்ற பழமொழிகள் மாற்றுத் திறனாளிகளைப் புறந்தள்ளுகிற சமூகக் கட்டமைப்பைக் கொண்டதாகவே சமூகத்தால் பரவலாக விளங்கிக் கொள்ளப் பெறுகிறது. குருடன், ஊமை, செவிடு, திக்குவாயன், மாங்கா மண்டை, குட்டைப் பையன், நொண்டி, முடவன், அரவாணிகள் என்று சமூகக் கட்டமைப்பில் உடல் அமைப்பில் அல்லது உறுப்பு அமைப்பில் மாறுபட்டும் – வேறுபட்டும் காண்பவர்களை அடையாளப்படுத்து வதற்கு மேற்கண்ட வசைச் சொற்கள் மூலமாகச் திட்டிச் செல்லுகின்ற அவல நிலையினை அடியோடுகளையும் முகமாகத் தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 'ஊன முற்றவர்கள்' என்ற சொல்லைப் புரட்டிப் போடும் முகத்தான் 'மாற்றுத் திறனாளிகள்' என்று புத்தம் புது கலைச் சொல்லால் குறிக்கச் செய்தார். மூன்றாம் பாலினத்தவரைத் 'திருநங்கையர்' என்று புது நாம கரணம் சூட்டி அரசாணை வெளியிட்டதற்குப் பின்பு தமிழ் – தமிழகச் சூழலில் பொதுவாக அதுவரை நிலவிய 'Physically Handicapped' என்று வழங்கிய சொல் வழக்கொழிந்து, 'Physically Challenged' என்ற சொல் கால் கொள்ள வழி வகுத்தது. அதுவரையில் தமிழகச் சூழலில் குற்றப் பரம்பரையினரை ஒதுக்குவது போன்றே மாற்றுத் திறனாளிகளும் ஒதுக்கப்பட்ட நிலை மாறுவதற்கு அரசின் இத்தகைய முன்னெடுப்பு வழி வகுத்தது. இருந்தும், தற்போதையக் காலச் சூழல் வரை 'விளிம்பு நிலை மாந்தராகவே' மாற்று திறனாளிகளின் வாழ்வியல் தொடர்வது மாந்தரின் சமூக விழுமியங்களுக்கு முரண்படுவதாகக் கவனப்படுத்துகின்றது. வாசிக்கப்படாதப் பக்கங்கள், மீட்டப்படாத இசைக் கருவிகள் என்று இவர்களைக் குறிப்பதாகவும் சமூக அடுக்கில் கண்டுணர முடிகின்றது.

மாற்றத்திற்கானத் திறனாளிகள்

மாற்றுத் திறனாளிகளாகப் பார்க்கின்ற தமிழகச் சூழலிலிருந்து மாற்றத்திற்கானத் திறனாளிகளாகப் பார்க்கின்ற பிரெஞ்சு சமூகக் கட்டமைப்பில் இவர்களின் இருப்பினையும், வீச்சினையும் பின் வருமாறு எடுத்தியம்ப முயற்சிக்கப் பெறுகின்றது.

உலகளாவிய நிலையில் மாற்றுத் திறனாளிகள்

பார்வைத் திறன் அற்றவர்களுக்கான பிரெயில் மொழியைப் பரிசோதனை முயற்சியாகக் கண்டுபிடித்தவர் லூயி பிரெயில் என்பவர். அதைச் செயற் வடிவத்தில்

‘பிரெய்லி’ எழுத்து முறையைப் பார்வைத் திறன் அற்றவர்களுக்குக் கண்டு பிடித்த எலன் கெல்லர், இழந்த சொர்க்கம்; மீண்ட சொர்க்கம் யாத்த ஜான் மில்டன், பிறரால் குட்டை என்று பழித்துரைக்கப் பெற்ற ஜார்ஜ் பெர்னாட்ஷா, அறிவியலைப் புதிய நோக்கில் புவியை அளக்கத் துணை புரிந்த ஸ்டீபன் ஆக்கின்ஸ், தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம்பெல், குட்டையானவன் என்று சக மாந்தரால் எள்ளி நகையாடப்பட்ட பிரான்சு நாட்டையாண்ட நெப்போலியன் போனபார்ட், கொடுங் கோல் மன்னன் என்று வரலாறு சுட்டுகின்ற இட்லர் போன்றோர் மாற்றுத் திறனாளிகளாகப் பொது வெளியில் அறியப்படுகின்றனர். செருமனி நாட்டைச் சார்ந்த ‘பீட்டர் ஆண்ட்ரூ’ என்பவர் ஆகச் சிறந்த செல்வந்தர் ஒருவரின் மகன். பிறப்பால் பேசுந் திறனும், கேட்குந் திறனும், எழுதும் திறனும் அற்றவர். ஆனால், அவரின் பெற்றோர்கள் அவரைப் பரவலான உளவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தியப் பிறகு அவருக்குள் முடங்கிக் கிடந்த ஓவியத் திறனை வெளிக் கொணர்ந்து வாயால் தூரிகையைக் கவ்விக் கொண்டு பற்பல சிறந்த ஓவியங்களை வரைந்து, பலரது கவனத்தை ஈர்த்ததை அறிய முடிகின்றது.[4]

பிரான்சில் மாற்றுத் திறனாளிகள்

‘ரே சார்லஸ்’ பிறப்பால் பார்வைத் திறன் அற்ற அமெரிக்க - ஆப்பிரிக்க மாற்றுத் திறனாளியான இவர் புகழ் பெற்ற கவிஞராகவும், பாடலாசிரியராகவும், பியானோ வாசிப்பவராகவும், பற்பல வகைப் பாடல்களுக்கு மெட்டு அமைப்பவராகவும் இனங் காணப்பட்டவராக அறியப் பெறுகின்றார். கி.பி. 1930 ஆண்டு அல்பேனியாவில் உள்ள ஜார்ஜியாவில் பிறந்த பிரதர் ரே என்ற பார்வைத் திறனற்ற மாற்றுத் திறனாளியான இவர் ‘கருவிலே திருவுடையான்’ என்று பாராட்டுவதற்குரியவராகத் துலங்கினார். பதினேழு கிராம்மி விருதுகளும், வாழ்நாள் சாதனையாளர் என்ற உயரிய விருதும் பெற்ற இவர் தலை சிறந்த மாற்றுத் திறன் சாதனையாளர் வரிசையில் பத்தாவது இடம் பெற்ற சிறப்பிற்குரியவராக விளங்கினார். பிறப்பால் செருமனி நாட்டவரும், பிரான்சினை வசிப்பிடமாகவும் கொண்ட பீத்தோவான், மொசார்டு மற்றும் சிம்பொனி இசைக்கு என்று இனங் காணப்பட்டவராக விளங்கினார். செவித் திறன் அற்ற வேளையிலும் பற்பல அருஞ்சாதனைகளைப் புரிந்து சிகரம் தொட்டவராக அடையாளங் காணப்பட்டுள்ளார். ‘மிஷேல் மத்தி’ என்ற பட்டப் பெயர் கொண்ட மதாம் நிம்மி மித்தி என்பவர் குட்டையுருவந் தாங்கியவர். உருவத்தில் 1.32 மீட்டர் அளவுடைய இவர் சிறந்த மேடை நாடக நடிகையாகவும், நகைச்சுவை நடிகையாகவும் புகழ் வெளிச்சம் அடைந்து பற்பல தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துப் பாரறியப் புகழ் பெற்றவராக விளங்கினார். பிறப்பால் பார்வையற்ற ‘ழில்பர் மோந்தாய்னி’ என்பாரின் கி.பி. 1971-ஆம் ஆண்டு வெளிட்ட ‘தெஃபூல்’ (de fool) என்ற இசை ஆல்பமானது பன்னாட்டு அளவில் இவரை உற்று நோக்கச் செய்தது. ஐரோப்பா முழுமைக்கும் தற்போதும் இவரது பாடல்களுக்குப் பரவலான வரவேற்பு உள்ளதாக அறியப் பெறுகின்றது.

பிரான்சில் மாற்றுத் திறனாளிகளும், அரசும்

பிரான்சினைச் சிறந்த வகையில் இரண்டு முறை ஆட்சி புரிந்த ‘ழாக் சிராக்’ என்ற அதிபர் காலத்தில்தான் மாற்றுத் திறனாளிகளுக்குப் பல்வேறுபட்ட வசதிகளும், வாய்ப்புகளும் முன்னெடுக்கப்பட்டன.[5] பேருந்து, தொடருந்து, விமான நிலையங்கள், தெருக்கள், அங்காடிகள், வளாகங்கள், அலுவலகங்கள் போன்ற இடங்களில் இவர்களுக்கென்று தனியாக வாகன நிறுத்துமிடங்கள்’ (Barking) ஏற்படுத்தப்பட்டன.

மேலும், உயர்ந்த கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகளில் அவர்களுக்கென்று படிகட்டுகள் மற்றும் சாய்வுத் தளங்கள் கட்டமைக்கப்பட்டன. தரைத் தளத்தில் சிறப்பு வசதிகளுடன் கூடிய வீடுகளும், குடியிருப்புகளும் கட்டமைக்கப்பட்டன. பேருந்து, தொடருந்துகளிலும் இவ்வாறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. பிரான்சில் 'சே ஆன் பே' (C N P) என்ற அமைப்பானது மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஆகச் சிறந்த நலவாரியமாகச் செயற்படு கின்றது. காப்புறுதித் திட்டங்கள் பலவும் இவ்வமைப்பு மூலமாக முன்னெடுக்கப் பெறுகின்றன. பிரான்சு நாட்டரசானது ஒவ்வொரு குறிப்பிட்ட மாந்தனின் மூளையையும் ஒரு மோட்டார் வாகனத்துக்கு இணையான இயக்கத் துக்கு ஒப்பீட்டளவில் குறிக்கின்றது. அந்த மூளை இயக்கமானது பத்து வகையான உளவியல் மற்றும் மருத்துவக் கண்ணோட்டங்களின் அடிப்படைகளில் அளவிட்டுக் கூறுவது ஆகச் சிறந்த முன்னெடுப்பாகப் பார்க்கப் பெறுகின்றது. இந்நிலை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாதொரு சிறப்பாகத் திகழுகின்றது. குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியலானது துயரம் மிடைந்ததாகவே காணப்படுவது இவண் ஒப்பு நோக்கத்தக்கது. ஒரு குறிப்பிட்ட மாற்றுத் திறனாளி எத்தகைய அளவீட்டின் அல்லது குறைபாட்டின் காரணமாக மாற்றுத் திறனாளி என்று உறுதி செய்யப்படுகின்றார் என்பதைப் பத்து மருத்துவர்கள் அடங்கிய குழு தீர்மானிக்கிறது. இக்குழுவே 'எம் டி பீ எச்' (MDPH) என்ற அமைப்பிற்கு 20%, 40%, 50%, 60%, 80%, இவை போன்ற விழுக்காடுகளில் குறைபாட்டைக் குறியீட்டளவில் குறிப்பிட்டு, அதற்கேற்றவாறு, 'நலத் தொகை' வழங்கப் பெறுகின்றது. சான்றாக, 80% விழுக்காடு குறைபாடுடையவர்களுக்கு மாதந்தோறும் 800 ஈரோக்கள் வழங்கப் பெறுகின்றன. போக்குவரத்தும், மருத்துவ வசதியும் 100 % இலவசம். கூடுதலாக 5 விழுக்காடானது அன்பளிப்பாகவும் வழங்கப் பெறு கின்றது. இந்திய மதிப்பில் 80 விழுக்காடு மாற்றுத் திறனாளியாகவுள்ள ஒருவருக்கு ஓர் இலட்சத்து இருபதாயிரம் (78,000) வழங்கப் பெறுகின்றது.

பிரான்சில் பொதுவாக 18 ஆண்டுகள் வயது வந்தவராகக் கணக்கீடு செய்யப் பெறுகின்றது. ஆனால், 20 ஆண்டுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வயது வந்தோருக்கான வரம்பு கணக்கிடப் பெறுகின்றது. 20 வயது ஆனதும் பெற்றோர் உரிய சான்றுகளுடன் நீதி மன்றத்தை அணுகி, அவர் மாற்றுத் திறனாளி என்பதற்கான சான்றிதழைப் பெற வேண்டும். பிறகு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செலவிட்ட செலவினங்களின் சான்றுகளை 'MDPH' அமைப்பிற்குப் பணிக்க வேண்டும். பெற்றோர், உறவினர், நண்பர் சமூக ஆர்வலர்கள், அமைப்பினர் 'டுய்தோர்' (Tutor) பெற கட்டாய மாக்கப்பட்டுள்ளது. இதன்பின்னரே உதவித் தொகையானது உரியவர்களுக்கு வழங்கப் பெறுகின்றது. மாற்றுத் திறனாளிகள் பரவலாகப் பொதுவான பள்ளிகளில் கல்வி கற்கின்றனர். ஆனால், சிறப்புப் பள்ளிகளில் இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கல்வியோடு தொழிற் பயிற்சி, கைவினை, பொழுது போக்கு, விளையாட்டு, வேலை வாய்ப்பிற்கான நடை முறைகள் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. ஓராண்டுக்கு 35 நாட்கள் மட்டுமே பெற்றோர், உறவினரைச் சந்திக்க அனுமதிக்கப் பெறுகின்றனர். பிரான்சில் இத்தகைய வாய்ப்புகளும், வசதிகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'வரிகளில் இருக்கின்ற உண்மைத் தன்மை பலரது வாழ்க்கையில் இருப்பதில்லை என்பதற்கொப்ப, பழிப்புரைகளையும் – வசவுச் சொற்களையும் புறந் தள்ளி மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுக்கின்ற

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

மாற்றத்திற்கான திறன்களைக் கொண்டவர்களாக இனங் காண பல நாடுகளும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட பிரான்சு அரசின் இத்தகைய நலத் திட்டங்கள் ஒரு சிறந்த தூண்டு கோலாகத் திகழுகின்றன. வாழ்க்கையில் கடினமான இலக்கினை அடைய முயல்பவர்களாகவும், இலக்குகளைக் குறிவைத்து – குறித்து வைத்து வெற்றியாளராக உருவெடுப்பதற்கு இத்தகைய வாழ்வாதாரங்கள் வாழ்வியல் ஆதாரங்களாக இனங் காண்பதற்கு உகந்தவாறும் துணை புரிகின்றன. இருந்தும், கடந்த ஆகஸ்ட் மாதம் (2023) 'அல்சாசு' மாவட்டத்திலுள்ளக் 'கொல்மார்' நகரில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகளின் காப்பகத்தில் ஏற்பட்ட மிகப் பெரியத் தீ விபத்தில் 9 மாற்றுத் திறனாளிகள் மரணமடைந்த நிகழ்வானது பிரான்சில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒரு கறும்புள்ளியாகவே அமைகின்றது.

ஆய்வு முடிபுரை

'உலக உயிர்கள் அனைத்தும் சமம்' என்பது பொதுமை அறமாக உள்ளது. முன்னர் சுட்டியவாறு "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதாக அமைகின்ற வள்ளுவர் கருத்தும் இக்கூற்றுக்கு ஒத்திசைந்து செல்லுகிறது. பிறப்பின் அடிப்படையில் மாந்தர் ஒருவரை ஒருவர் வேறுபடுத்தக் கூடாது என்பது தமிழர்தம் தொன்று தொட்டு வெளிப்படக் கூடியக் கருத்தாக அமைகின்றது. இருந்தும், மாந்தர் தம்மொத்தவரையே பல்வகைப்பட்ட வேற்றுமை உணர்வுகளால் வேறுபடுத்திப் பார்க்கின்ற அவலமும் நீட்சிக் கண்டுள்ளது. குறிப்பாக, மாற்றுத் திறனாளிகளைத் தனி மாந்தனும், பொதுச் சமூகமும் பார்க்கின்ற பார்வையானது, புறந்தள்ளுகின்ற சூழமைவானது அறக் கோட்பாடுகளுக்கும், அறிவியல் சிந்தைனைகளுக்கும் பொருந்தாதச் சூழமைவாகவே நிலவுகிறது.

குறிப்புகள்

[1] ஔவையார், தனிப்பாடல் திரட்டு, பா. 56
[2] மேலது,
[3] வேதநாயகப் பிள்ளை மாயூரம் முனிசீப், நீதிநூல், பா. 98
[4] குளோரியா சுந்தரமதி, உளவியல் வல்லுநர், தகவலாளி
[5] ழெழார் மோரீசு, பிரான்சு, தகவலாளி

References

[1] Auvaiyar. *Thanippadal Thirattu*. Poem 56.
[2] Auvaiyar. *Ibid.*
[3] Vedhanayaga Pillai (Mayuram Munsif). *Neethi Nool*. Poem 98.
[4] Gloria Sundaramathi. Psychologist. Informant.
[5] Zhezhar Maurice. France. Informant.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.
கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

வற்றும் ஏரியின் மீன்கள் சிறுகதையை முன்னிறுத்தி நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்

Sustainable Development Goals in the Context of the Short Story *"Vatrum Eriyin Meengal"*

வே. காந்திமதி, பதிவு எண்: 24PTAF01 முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
V. Gandhimathi, Reg. no.: 24PTAF01, Ph.D. Research Scholar, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.
முனைவர் இராம. பரிமளம், ஆராய்ச்சி நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி .கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
Dr. R. Parimalam, Research supervisor, Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.

Abstract

Ambai's short story "Vattrum Yeriyin Meengal" vividly portrays the lifestyle of rural people. It highlights how poverty and the unavoidable family circumstances arising from it act as barriers to education and economic progress. The protagonist, Bimla Devi, manages to overcome these challenges through her studies and achieves a respectable position in society. Driven by a desire to give back, she wishes to provide the same education to the children of her village. To assist in this mission, she invites her friend, Kumud, to the village. As Kumud travels there, the harsh realities of the settlement are described: a lack of sanitation facilities, dilapidated roads, and a complete absence of medical infrastructure. This remains the reality for many villages across India today. Furthermore, this is not just an Indian issue but a global challenge. To address such disparities, the United Nations has established 17 Sustainable Development Goals (SDGs) and provides support to achieve them. The primary objective is to reach significant milestones by the year 2030. While the Indian government has formulated various schemes based on these goals, rural areas have not yet seen growth on par with urban centers. Factors such as socio-cultural mindsets, deep-rooted poverty, and a lack of awareness continue to act as major hurdles in implementing development projects within rural communities.

Keywords: Vatrum Eriyin Meengal, Short Story, Sustainable Development Goals.

ஆய்வுச் சுருக்கம்

"வற்றும் ஏரியின் மீன்கள்" என்ற அம்பையின் சிறுகதை கிராமப்புற மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகிறது. வறுமை, வறுமையினால் ஏறப்படும் தவிர்க்க முடியாத குடும்பச் சூழல் கல்வியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் தடை செய்கிறது. பிம்லா தேவி என்ற பெண்மணி இச்சூழலைக் கடந்து பயின்று நல்ல நிலையை அடைகிறாள். தான் கற்ற கல்வியை தன் கிராமத்து குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்; என விரும்புகிறாள். இதற்கு உதவியாக தன் தோழி குமுத் என்பவளை தன் கிராமத்திற்கு அழைக்கிறாள். குமுத் வரும் வழியில் அக்கிராமத்தின் நிலை எடுத்துரைக்கப்படுகிறது. கழிப்பறை வசதியின்மை, குண்டும் குழியுமான சாலை, மருத்துவ வசதியில்லாத நிலை போன்ற சூழலில் தான் அச்சிற்றூர் இருந்தது. இதுதான் இந்தியாவிலுள்ள பல சிற்றூர்களின் இன்றைய நிலை, இது இந்தியாவிலுள்ள சிக்கல் மட்டுமன்று உலகளாவிய சிக்கலும் கூட. இதனைச் சரிசெய்ய ஐக்கிய நாடுகள் சபை நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் என 17 இலக்குகளை நிர்ணயித்து அதற்கு

உதவியும் செய்து வருகிறது. 2030ஆம் ஆண்டிற்குள் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இதன் குறிக்கோள். இந்திய அரசு இதன் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வகுத்தாலும், நகர்ப்புறங்களின் அளவு இன்னும் கிராமப்புற பகுதிகள் வளர்ச்சியடையவில்லை. சமூகப் பண்பாட்டு உணர்வு, வறுமை, விழிப்புணர்வின்மை போன்றவை கிராமப்புறங்களில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தடையாக உள்ளது.

குறிப்புச்சொற்கள்: வற்றும் ஏரியின் மீன்கள், சிறுகதை, நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்.

முன்னுரை

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தியடைதலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. வளர்ந்த நாடுகளிலும் கூட இன்னும் அடிப்படைத் தேவை கிடைக்கப்பெறாத மக்கள் இருக்கின்றனர். அனைத்து நாடுகளும் அமைதியுடன் செயல்படவும், முன்னேற்றப் பாதையில் செல்ல பல்வேறு வழிமுறைகளை உருவாக்கவும் ஏற்படுத்தப்பட்டதே ஐக்கிய நாடுகள் சபை. இதில் 2030ஆம் ஆண்டிற்குள் உலக நாடுகள் அடைய வேண்டிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதே நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள். இதற்கான பல்வேறு உதவிகளையும் உலகநாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை வழங்குகிறது.

ஆய்வு நோக்கம்

அம்பை அவர்களுடைய வற்றும் ஏரியின் மீன்கள் சிறுகதையை முன்னிறுத்தி நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளில் மூன்றாவது இலக்கான ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்து நல்வாழ்வை மேம்படுத்துதல், நான்காவது இலக்கான அனைவருக்கும் தரமான கல்வி, ஆகியவற்றை விளக்குவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு கருதுகோள்

இந்திய அரசு நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில் பல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டே இருக்கிறது. அதன் அடிப்படையில் நகர்ப்புறங்களில் கல்வி, மருத்துவம், பாலின சமத்துவம் முதலியவற்றில் விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது போல் தோற்றமளித்தாலும் பல்வேறு காரணங்களாலும் கிராமப்புறங்களில் இன்னும் பெரிய அளவிலான மாற்றம் ஏற்படாமல் பின்தங்கிய நிலையே உள்ளது, என்பது இவ்வாய்வின் கருதுகோள்.

ஆய்வு எல்லை

அம்பையின் "வற்றும் ஏரியின் மீன்கள்" என்ற சிறுகதையும் "நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்" பதினெழும் எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது.

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் என்பது பல்வேறு நாடுகளில் நிலவும் உலகளாவிய பிரச்சனைகளை மையமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையால் 17 இலக்குகளுடன் உருவாக்கப்பட்டதாகும். சுமார் பதினைந்து ஆண்டுகளில் (2015லிருந்து 2030ஆம் ஆண்டிற்குள்) வறுமை, பாலின சமத்துவமின்மை, கல்வி தரம், சுற்றுச் சூழல் மாசுபாடு, ஆரோக்கியம் போன்ற சிக்கல்களுக்குத் தீர்வு காண ஐ.நா உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாகும். இந்த பதினெழு இலக்குகளும் மத்திய மற்றும் மாநில அரசுகள் திட்டங்களை வகுக்க வழிகாட்டுகிறது. இதனை,

"நிலையான வளர்ச்சி இலக்குகள்" அல்லது "வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள்கள்" (Goal 3: Good Health And Well-Being) என்றும் அழைக்கப்படுகிறது.

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்

1. வறுமை ஒழிப்பு (No Poverty)
2. பசியின்மை (Zero hunger)
3. நல்ல ஆரோக்கிம் மற்றும் நல்வாழ்வு (Good health and well-being
4. தரமான கல்வி (Quality education)
5. பாலின சமத்துவம் (Gender equality)
6. சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (Clean water and sanitation)
7. மலிவுவிலை மற்றும் தூய்மையாக ஆற்றல் (Affordable and clean energy)
8. நல்ல வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் (Decent work and economic growth)
9. தொழில்த்துறை, புதுமை மற்றும் உள்கட்டமைப்பு (Industry, Innovation, and Infrastructure)
10. சமத்துவமின்மையைக் குறைத்தல் (Industry, Innovation, and Infrastructure)
11. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (Sustainable cities and communities)
12. பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (Responsible consumption and production)
13. காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்த்துப் போராட அவசர நடவடிக்கை எடுத்தல் (Climate action)
14. நீருக்கடியில் வாழும் உயிரினங்களைப் பாதுகாத்தல் (Life below water)
15. நிலத்தில் வாழும் உயிரினங்களைப் பாதுகாத்தல் (Life below water)
16. அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் ((Promote peaceful and inclusive societies for sustainable development)
17. இலக்குகளுக்கான கூட்டாண்மை (Strengthen the means of implementation and revitalize the global partnership for sustainable development)

சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்

1. நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளில் ஆறாவது இலக்கு அனைவக்கும் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதை உறுதி செய்வதாக உள்ளது. இந்த இலக்கின் கீழ்
2. 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் குடிநீருக்கான உலகளாவிய சமமான அணுகலை அடைதல்,
3. 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதுமான, சமமான சுகாதாரம், திறந்தவெளி மலம் கழிப்பதை முடிவுக்குக் கொண்டு வருதல், பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களின் தேவைக்குச் சிறப்புக் கவனம் செலுத்துதல்,
4. 2030ஆம் ஆண்டளவில் அனைத்து துறைகளிலும் நீர் பயன்பாட்டுத் திறனை கணிசமாக அதிகரித்தல், நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்தல், நிலையான நீர் நுகர்வு மற்றும் நன்னீர் விநியோகத்தை உறுதி செய்தல்,
5. 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்து மட்டங்களிலும் ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை செயல்படுத்துதல், பொருத்தமான எல்லை தாண்டிய ஒத்துழைப்பின் மூலமாக,
6. 2020ஆம் ஆண்டிற்குள் மலைகள், காடுகள், ஈர நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் தொடர்பான சுற்றுசூழல் அமைப்புகளைப் பாதுகாத்து மீட்டெடுத்தல்,
7. 2030ஆம் ஆண்டளவில் நீர் அறுவடை, உப்பு நீக்கம், நீர் திறன், கழிவுநீர் சுத்திகரிப்பு, மறுசுழற்ச்சி மற்றும் மறுபயன்பாட்டு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட நீர் மற்றும்

சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவை விரிவுபடுத்துல்,

8. நீர் மற்றும் சுகாதார மேலாண்மையை மேம்படுத்துவதில் உள்ளூர் சமூகங்களின் பங்களிப்பை ஆதரித்து வலுப்படுத்துல் ஆகிய கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளது.

"வற்றும் ஏரியின் மீன்கள்" சிறுகதையில் குமுத் என்ற பெண்மணி தனது தோழியான பிம்லா தேவியின் அழைப்பை ஏற்று இந்திய நோபள எல்லையிலுள்ள ஒரு சிற்றூருக்கு பேருந்து வழியாகப் பயணம் மேற்கொள்கிறாள். செல்லும் வழியில் சரியான கழிப்பிட வசதி இல்லை. பெண்கள் தங்கள் அவசர தேவைக்குப் பொதுவெளிடயைப் பயன்படுத்தும் நிலைதான் இருந்தது. இந்நிலைதான் இப்போது இந்தியாவின் பல்வேறு கிராமங்களிலும் நிலவி வருகிறது. அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து கிராமப்புறங்களிலுள்ள எல்லா வீடுகளுக்கும் கழிவறைகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இருப்பினும் சரியான விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் மக்கள் அவற்றைப் பயன்படுத்துவது இல்லை. பல்வேறு வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மக்களிடையே கழிவறையைப் பயன்படுத்துவதன் அத்தியாவசியத்தை விளக்க வேண்டும். மேலும், கிராமப் பகுதிக்கு வந்து செல்லும் மக்களுக்குப் போதுமான அளவு பொது கழிப்பிட வசதியையும் அதில் எல்லா நேரமும் தடையில்லாத நீர் வசதி இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறன செயல்பாடுகள் மூலம் நிலைத்தகு வளர்ச்சி இலக்கு ஏழினை விரைவாக அடைய முடியும்.

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

குமுத் அவளுடைய பெற்றோர்களுக்கு ஆறாவது மகளாகப் பிறந்தாள். அவள் பிறந்தவுடன் அவள் அவளுடைய தாய் இறந்துவிட்டாள். இன்றளவும் இந்தியாவின் பல்வேறு இடங்களில் குழந்தை பிறப்பின் போது இறக்கும் பெண்களின் விகிதம் குறைந்தாலும் முழுமையாகத் தடைபடவில்லை. அப்போல் பிறந்தவுடன் அல்லது பிறப்பிற்கு முன்பே இறந்து பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் இருக்கத்தான் செய்கிறது. இந்நிகழ்வுகள் போதிய ஊட்டச்சத்து தாய்க்கும் சேய்க்கும் கிடைக்காததையும் போதிய அளவில் மருத்துவ வசதியின்மையையும் காட்டுகிறது.

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் மூன்றின் கீழ்:

1. 2030ஆம் ஆண்டிற்குள், உலகளாவிய பிரசவத்தின் போது ஏற்படும் தாய் இறப்பு விகிதத்தை 100,000ம் பிறப்புகளுக்கு, இறப்பு 70திற்கும் கீழ் என்று குறைத்தல்.
2. 2030ஆம் ஆண்டிற்குள், புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தடுக்கக்கூடிய இறப்புகளை முடிவுக்குக் கொண்டு வருதல், அனைத்து நாடுகளுக்கும் பிறந்த குழந்தைகளின் இறப்பை 1000 பிறப்புகளுக்கு குறைந்தது 25 ஆகவும் குறைக்க இலக்கு நிர்ணயித்தல்.
3. 2030ஆம் ஆண்டுக்கள், எய்ட்ஸ், காசநோய், மலேரியா மற்றும் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களின் தொற்றுநோய்களை முடிவுக்குக் கொண்டு வந்து, ஹெப்படைடிஸ், நீர் மூலம் பரவும் நோய்களை எதிர்த்துப் போராடுதல்.
4. 2030ஆம் ஆண்டுக்குள், தடுப்பு மருந்து மற்றும் சிகிச்சை மூலம் தொற்றா நோய்களால் ஏற்படும் இளம் வயது சிறப்பை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்து, மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.
5. போதைப் பொருள் பயன்பாடு மற்றும் தீங்கு விளைவிக்கும் மது பயன்பாடு உள்ளிட்ட போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கு வழிவகை செய்தல் மற்றும் சிகிச்சையை பலப்படுத்துதல்.
6. 2020ஆம் ஆண்டிற்குள், உலகளாவிய சாலை விபத்துகளால் ஏற்படும் இறப்புகள் மற்றும் காயங்களில் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல்.

7. 2030ஆம் ஆண்டளவில் குடும்பக் கட்டுப்பாடு, தகவல், கல்வி, தேசிய உத்திகள் மற்றும் திட்டங்களின் இனப்பெருக்க ஆரோக்கியத்தை ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பராமரிப்பு சேவைக்களுக்கான உலகளாவிய அணுகலை உறுதிசெய்தல்.
8. 2030ஆம் ஆண்டளவில் ஆபத்தான இராசாயனங்கள், காற்று, நீர் மற்றும் மண் மாசுபாடு மற்றும் மாசுபாட்டால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நோய்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்தல்.
9. உலக சுகாதார அமைப்பின் புகையிலை கட்டுபாடு தொடப்பான கட்டமைப்பு மாநாட்டை அனைத்து நாடுகளிலும் பொருத்தமாகச் செயல்படுவதை வசப்படுத்துல்.
10. வளரும் நாடுகளை முதன்மையாகப் பாதிக்கும் தொற்று மற்றும் தொற்றல்லாத நோய்களுக்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளுக்கான ஆராய்ச்சி மேம்பாட்டை அதிகரித்தல், TRIS ஒப்பந்தம் மற்றும் பொது சுகாதாரம் குறித்த தோஹோ பிரகடனத்தின் படி தடுப்பூசிகளை வழங்குதல். இது பொது சுகாதாரத்துக்கான நெகிழ்வுத்தன்மை தொடர்பான அறிவுசார் சொத்துரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் குறித்த ஒப்பந்தத்தில் உள்ள விதிகளை முழுமையாகப் பயன்படுத்த வளரும் நாடுகளின் உரிமையை உறுதிப்படுத்துகிறது, குறிப்பாக அனைவருக்கும் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்கிறது.
11. வளரும் நாடுகளில், குறிப்பாக வளர்ச்சியடையாத நாடுகளில், சிறிய தீவுகளில் சுகாதார நிதியுதவி மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு, மேம்பாடு, பயிற்ச்சி மற்றும் தக்கவைப்பு ஆகியவற்றை கணிசமாக அதிகரித்தல்.
12. தேசிய மற்றும் உலகளாவிய சுகாதார அபாயங்களை முன்கூட்டியே எச்சரித்தல், இடர் குறைப்பு, மற்றும் மேலாண்மை செய்வதற்கான அனைத்து நாடுகளின் குறிப்பாக வளரும் திறனை வலுப்படுத்துதல்.

ஆகிய கொள்கைகள் வகுக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இருப்பினும் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு உணர்வுளாலும், போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலும் அதிக அளவிலான குழந்தைப் பிறப்பினால் உடலில் போதிய ஊட்டச்சத்து இல்லாமல் பிரசவத்தின் போது தாய் இறக்கும் நிலை அல்லது சேய் இறக்கும் நிலை ஏற்படுகிறது. சில நேரங்களில் தாய், சேய் இருவரும் இறக்கும் நிலை ஏற்படுகிறது. ஊட்டசத்து குறைபாட்டின் காரணமாக இறப்பிற்குள்ளாகும் குழந்தைகளின் எண்ணிக்கை இந்தியாவில் இன்றளவும் கணிசமான அளவில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. **“இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமுள்ள நாடுகளில் தொற்று நோய்கள் விரைவாகப் பரவுகிறது. தடுப்பு மருந்துகள் இருந்தாலும் கூட தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவது சற்று கடினமான ஒன்றாகவே உள்ளது.” (தமிழ் பேராய்வு இதழ் தொகுதி 14, பக்கம்: 2)** இச்சூழல் எவ்வளவு கடினமானது எத்தனை உயிர் இழப்புகளை ஏற்படுத்தும் என்பதை கொரோனா பெருந்தொற்று காலத்தில் அனைவரும் உணர்ந்தனர். ஊட்டசத்தின் அவசியம் மற்றும் ஆரோக்கியம் குறித்த அக்கறை அப்போதுதான் மக்களிடையே பெரிய அளவில் ஏற்பட்டது. இன்னும் அதிக அளவில் மக்களிடையே சுகாதார மேம்பாட்டை உக்குவிக்க அரசு வழிவகை செய்யவேண்டும். “சுகாதார மேம்பாடு என்பது மக்கள் தங்கள் ஆரோக்கியம் மீதான கட்டுபாட்டை அதிகரிக்கவும் மேம்படுத்தவும் உதவும் செயல்முறையாகும். இது தனிப்பட்ட நடத்தையில் கவனம் செலுத்துவதைத் தாண்டி, பரந்த அளவிலான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தீர்மானிப்பவர்கள் நோக்கி நகர்கிறது.” (The new public health, page no: 8, fourth edition).

“இந்தியாவின் கலாச்சார பாரம்பரியம் பெருமை மற்றும் உத்வேகம் மட்டுமல்ல, நாட்டிற்கு சவால்கள் மற்றும் வாய்ப்புகளையும் வழங்குகிறது. அதன் பன்முகத்தன்மை சில நேரங்களில் வெவ்வேறு குழுக்களிடையே பதட்டங்கள் மற்றும் மோதல்களுக்கு

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

வழிவகுக்கும், அதே நேரத்தில் மாற்றத்தின் விரைவான வேகம் சில நேரங்களில் பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகளை அச்சுறுத்தும். இருப்பினும், புத்திசாலித்தனமாக நிர்வகிக்கப்பட்டால், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியம் சமூக ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஒரு சக்திவாய்ந்த சக்தியாக இருக்கும்." (களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்விதழ், தொகுதி. 4, எண். 4).

அனைவருக்கும் சமமான தரமான கல்வி

வற்றும் ஏரியின் மீன்கள் என்ற சிறுகதையின் மையக் கருவாக கிராமப்புறங்களிலுள்ள கல்வி "கற்க இயலாத சிறுவர் மற்றும் கற்பதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவது அமைந்துள்ளது."

பிம்லா தேவி என்ற பெண் கதாப்பாத்திரம் கிராமப்புறத்தில் விவசாயம் செய்யும் குடும்பத்தில் பிறந்து பல்வேறு இன்னல்களைக் கடந்து தன்னுடைய கல்வியைத் தொடர்கிறாள். படித்து முடித்துவிட்டு நல்ல நிலைக்கு வந்த பின்பும் தன்னுடைய கிராமத்தை மறவாமல் அங்குள்ள குழந்தைகளுக்கு தரமான கல்வி கிடைக்க வேண்டும் என எண்ணுகிறாள். வெளிநாட்டிற்குச் சென்று வசதியாக வாழ வாய்ப்பிருந்த போதும் தான் கற்ற கல்வியை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு தன் வாழ்வை அர்பணித்தாள். இச்சிறுகதையில் வரும் சூழல் போன்றுதான் இன்று பல்வேறு கிராமங்களின் சூழலும் உள்ளது.

"கல்வி கற்ப்பதால் ஏற்படும் மாற்றம் குறித்த விழிப்புணர்வின்மை குடும்ப சூழல், வறுமை, இருக்கும் இடத்திற்கு அருகில் தரமான கல்வி கிடைக்காத நிலை போன்றவை இன்றைய கிராமப்புற சிறார்களின் கல்வியின்மையையும், கல்வி தரத்தையும் கேள்விக்குட்படுத்துகிறது." (தமிழ் பேராய்வு இதழ், தொகுதி 13, பக்கம் 12).

"கல்வி என்பது ஒரு சமூகத்தைச் சார்ந்த ஒட்டுமொத்த அனுபவங்களின் நிகழ்வுகளைக் குறிப்பதாக அமைவதை அறிய முடிகிறது. நாளடைவில் இது சமூகவியலின் அடிப்படையில் கல்வி ஒரு தலைமுறை அனுபவத்தை கடத்துவது என அறியப்படுகிறது." (பிரணவ் தமிழ் ஆய்விதல் 2024, பக்கம். 23)

நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் 4ன் அடிப்படையில் இந்திய அரசு அனைவருக்கும் தரமான கல்வி, தமிழக அரசு இலவசப் பாடப் புத்தகம், காலை மற்றும் மதிய உணவுத் திட்டம், இலவச மடிக்கணினி, சீருடை, மிதிவண்டி, போன்ற பல்வேறு திட்டங்களின் வழியாக ஏழை மாணவர்களின் கல்வி பயிலும் வாய்ப்பை உறுதி செய்துள்ளது. மேலும் இத்தகைய திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி 100 சதவீத கற்றலை உறுதிபடுத்த வேண்டும்.

முடிவுரை

உலகநாடுகளின் முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாடுகள் சபை, 2030ஆம் ஆண்டிற்குள் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் என 17 இலக்குகளை அமைத்துள்ளது. இவ்விலக்குகளைக் கருத்தில் கொண்டு உலக நாடுகள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டாலும் கிராமப் பகுதியில் விரைவான வளர்ச்சி ஏற்படவில்லை. தரமான கல்வி, பாலின சமத்துவமின்மை, சுகாதாரமின்மை, போதுமான மருத்துவ வசதியின்மை போன்ற சூழல் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு ரீதியிலான காரணமும், வறுமையும் முக்கியக் காரணமாக உள்ளது. அரசு தரமான கல்வியை உறுதி செய்வதும், தொடர்ந்து அடிப்படை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது, இந்நிலையை மாற்றும் என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

[1] ஜெயமோகன். *அறம்*. விஷ்ணுபுரம் பதிப்பகம்.
[2] ஜெயமோகன். *நவீனத் தமிழிலக்கிய அறிமுகம்*. விஷ்ணுபுரம் பதிப்பகம்.

[3] மருத்துவர் அ. கதிரேசன். *காசநோய் மருத்துவம்*. உலக சுகாதாரக் கழகம்.
[4] செ. ஆனைமுகன். *மகப்பேறும் மகளிர் மருத்துவமும்*. உலக சுகாதாரக் கழகம்.
[5] கல்வி கோபாககிருஷ்ணன். *சத்துணவுத் திட்டம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[6] கல்வி கோபாககிருஷ்ணன். *தொற்றுநோய்களும் தடுப்பு முறைகளும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[7] மருத்துவர் பி. சந்திரா. *குழந்தைப் பருவ நோய்களும் குழந்தைகள் பாதுகாப்பும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[8] *யுனிசெஃப் – நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள் : இலக்கு 3 – நல்ல உடல்நலம் மற்றும் நலன்*. https://data.unicef.org/sdgs/goal-3-good-health-wellbeing/
[9] *தமிழ்நாடு நிலைத்தகு வளர்ச்சி இலக்குகள்) TNSDG) இணையதளம்*. https://tnsdg.tn.gov.in/
[10] டாக்டர் யாஸ்மின் ஸைட்மேன். *நோ பாவர்டி : எ டுரூலி சஸ்டெயினபிள் ஃப்யூச்சருக்கான மேனிஃபெஸ்டோ*.
[11] டேவிட் ஹுல்ம் மற்றும் ரோர்டன் வில்கின்சன். *தி சஸ்டெயினபிள் டெவலப்மெண்ட் கோல்ஸ் : எ பிரீஃப் கைடு*.

References

[1] Jeyamohan. *Aram*. Vishnupuram Pathippagam.
[2] Jeyamohan. *Navina Tamil Ilakkiya Arimugam*. Vishnupuram Pathippagam.
[3] Dr. A. Kathiresan. *Kasanoy Maruthuvam*. World Health Organization.
[4] Se.Aanaimugan. *Magapperu Matrum Magalir Maruthuvam*. World Health Organization.
[5] Kalvi Gopakakrishnan. *Sathunavu Thittam*. New Century Book House.
[6] Kalvi Gopakakrishnan. *Thotrunoygalum Thaduppu Muraigalum*. New Century Book House.
[7] Dr. B. Chandra. *Kuzhandhai Paruva Noygalum Kuzhandhaigal Paathukaappum*. New Century Book House.
[8] UNICEF. *Sustainable Development Goals: Goal 3 – Good Health and Well-being*. https://data.unicef.org/sdgs/goal-3-good-health-wellbeing/
[9] Government of Tamil Nadu. *Tamil Nadu Sustainable Development Goals (TNSDG) Website*. https://tnsdg.tn.gov.in/
[10] Dr. Yasmin Zaidman. *No Poverty: A Truly Sustainable Future – A Manifesto*.
[11] David Hulme and Rorden Wilkinson. *The Sustainable Development Goals: A Brief Guide*.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.
கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

வைரமுத்துவின் *மூன்றாம் உலகப்போர்* காட்டும் சமுதாய சிந்தனைகள்

Social Reflections Presented in Vairamuthu's *Third World War*

வி. கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 001, தமிழ்நாடு, இந்தியா.
V. Krishnamoorthy, Assistant Professor of Tamil, National College,
Tiruchirappalli – 620 001, Tamil Nadu, India.

Abstract

Sociology is a discipline that seeks to understand human society through scientific methods. It studies the structure of human society, its functioning, the relationships between individuals, values, customs, economic and political influences, and social changes. The sociology dictionary defines it as "the scientific study of human social behavior." In other words, sociology helps us understand how an individual develops within a social environment and how society influences their thoughts, actions, and way of life. There exists a close and inseparable connection between society and literature. Literature reflects society and also acts as its conscience. It serves as a medium through which the issues, struggles, aspirations, and transformations occurring within a society during a particular period are artistically represented. In particular, the novel as a literary form has the capacity to depict society in its entirety. By taking society as its foundation, a novel can comprehensively explore various dimensions of human life and social experiences. Within this framework, the novel "Third World War" emerges as an important work expressing contemporary social thoughts. The novel places a strong emphasis on environmental impact, highlighting concerns about overconsumption, exploitation of natural resources, and pollution, which pose serious threats to future human survival. Similarly, education is presented as a fundamental element for social progress; however, the novel also points out that inequalities in access to education can deepen social disparities. Moreover, the novel vividly portrays the condition of farmers, showing their hardships, such as loss of land, debt burdens, and market difficulties, which push them into distress. As a solution, natural farming—working in harmony with nature—is suggested as a sustainable alternative. In this way, the novel "Third World War" examines social issues from a sociological perspective and encourages readers to reflect on the necessary changes for the betterment of both individuals and society.

Keywords: Environment, Natural resources, Global warming, Water, Land, Air.

ஆய்வுச் சுருக்கம்

ஒரு மனிதன் தன் தேவைக்காக மற்றொருவனை நாடுவது சமுதாயத் தோற்றத்தின் அடிப்படையாகும். அவ்வாறு ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளின் அடிப்படையில் சமுதாயத் தோற்றம் பெறுகிறது என்று கூறலாம். மனிதனுடைய வாழ்க்கையில் தன் சூழலுக்கு ஏற்ப வாழ்வு நிலை மாறுபடுவது போல உலகில் சமுதாய மொழிகளும் சூழலுக்கு ஏற்ப காலத்திற்கு காலம் மாறுபடும். அது போல் இலக்கிய வடிவ அமைப்புகளும் மாறுபடும். சமுதாயம் என்ற சொல் இன்று உலகெங்கும் மிகுதியாகப் பேசப்படுகிறது. சமுதாய வளர்ச்சி, சமுதாய நலன் இவற்றிற்காகத் தனி மனிதனின் உரிமைகளைக் கூடப் பிரித்து விடலாமென்று

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

கருதப்படுகிறது. இந்த சமுதாய உணர்வு இன்று திடீரென புதிதாகப் பிறந்துவிடவில்லை. உலகில் மக்கள் இனம் சிந்திக்க தொடங்கிய நாள் முதலே இந்த உணர்வு தோன்றி வளர்ந்து வருகிறது. இன்றைய வாழ்க்கை முறையில் மனிதன் தனியாக வாழ்தல் என்பது இயலாத ஒன்று. ஒன்றோடோன்று சார்ந்தும், இணைந்தும், கூட்டமாக வாழ்தலே சமுதாயமாகும். பண்டைய காலத்திலிருந்து மனிதன் சிந்திக்க தொடங்கிய காலம் முதல் தனி மனிதனாக வாழாமல் சமூகத்தோடு இணைந்து படிமுறை வளர்ச்சியாக வளர்ந்து இன்று சமுதாயச் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு காரணம் ஒழுக்கநிலையே ஆகும். காலங்களின் மாற்றத்திற்கு ஏற்ப மனிதனுடைய மனம், மனித அறிவு, வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றால் சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இவ்வாறாக ஏற்படக்கூடிய மாற்றங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றன.

குறிப்புச் சொற்கள்: சுற்றுச் சூழல், இயற்கை வளம், புவி வெப்பமாதல், நீர், நிலம், காற்று.

முன்னுரை

மனிதன் சிந்திக்க தொடங்கிய காலம் முதல் தனி மனிதனாக வாழாமல் சமூகத்தோடு இணைந்து வளர்ந்து இன்று சமுதாயச் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு காரணம் ஒழுக்கநிலையே ஆகும். மனிதனுடைய மனம், மனித அறிவு, வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றால் சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. சமுதாயம் என்பது அனைத்து மக்களின் கூட்டு அமைப்பாகும். "**சமுதாயம் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே செல்கிறது. சமுதாயத்தில் நிகழ்கின்ற மாற்றங்களையும். போராட்டங்களையும் சமூக நாவலாசிரியர்கள் தம் படைப்புகளில் காட்டுகிறார்கள்**" என்பார் முத்து சண்முகம் (ப.104) மாற்றம் ஒன்றே மாறாதிப்பது இவ்வுலகில் காலம் மாறிக்கொண்டே வருகிறது. அதனால் சமூக அமைப்புகளும் சூழலும் மாறி வருகின்றன. அவற்றைப் பதிவு செய்வதில் இலக்கியம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சி.இ.மறைமலை (ப.18) இவ்வாறாக சமுதாயம் பல கூறுபாடுகளைக் கொண்டது. இக்கூறுபாடுகள் எண்ணற்றவையாக இருந்தாலும் அவை அரசியல் சட்டம், பொதுவாழ்வு, குடும்ப வாழ்வு, சமயம் என்ற பொதுப் பிரிவில் அடங்குகிறது. சமுதாயத்தின் எல்லா காலங்களிலும் முரண்பாடுகளும் போராட்டங்களும் விதை விடாதே நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன இவற்றின் மத்தியிலேயே எழுத்தாளனும் வாழ்கின்றான் இன்று சமுதாயத்தை பற்றி கைலாசபதி அவர்கள் கூறுகிறார் (பக்.21-23)

சுற்றுச்சூழல் பாதிப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்-110)

என்ற வள்ளுவரின் குரல் நெறிப்படி மனித குலம் உயர அவன் வாழும் சூழலே காரணமாகும். இன்று அதிக அளவிலான மக்கள் தொகைப்பெருக்கத்தினாலும் முறையற்ற வாழ்வின் முறையாலும் மனிதர்களைச் சார்ந்த சுற்றுப்புறங்களும் சூழ்நிலைகளும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. மனிதர்கள் உயிர்வாழ அடிப்படையான நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபாடு அடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. அதிகமான மக்களின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் பல தொழிற்சாலைகள் தோன்றிவிட்டன. ஆனால் தொழிற்சாலையில் இருந்து

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

வெளியேறும் கழிவுநீர் மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய நீர்நிலைகளை முற்றிலும் மாசுபாடு அடையச் செய்கிறது.

"கரட்டுல மில்லு கட்டியிருக்காங்க அவுங்க சாயக்கழிவுத் தண்ணித்தான் கசிஞ்தசி கசிஞ்சி கெணருகள்ல செந்தண்ணியா எறங்குது. மில்லுவந்தா குடிக்க கஞ்சி கிடைக்கும்னு பார்த்தா இப்ப குடிக்க தண்ணி கிடைக்காது போல இருக்கே" (மூன்றாம் உலகப் போர், பக். 26-27)

பெரும்பாலான நகரங்களில் தொழிற்சாலைகளும், சாயப் பட்டறைகளும், இயங்கி வருகின்றன.இதுபோன்ற தொழிற் கூடங்கள் கிராமங்களிலும் புகுந்துவிட்டன. இந்த தொழிற்சாலையிலிரருந்து வெளியேறக்கூடிய கழிவுநீர் முறையான சுத்திகரிப்பு இல்லாமல் ஆறுகளிலும்,விவசாய வெளிகளிலும் விட்டுவிடுகின்றனர்.இதனால் நிலத்தடி நீரும் கிணறுகளில் சுரக்கின்ற நீர்தன்மையும் பாதிப்படைகிறது. மேலும் மக்கள் குடிப்பதற்கும் மற்றும் விவசாய புழக்கத்திற்கும் நீர்தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலையினை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் நாவலாசிரியர் வைரமுத்து அவர்கள் கூறியுள்ளதை காண முடிகிறது.

புவி மாசுபாடு

சுற்றுச் சூழல் பாதிப்புகளில் முதன்மையாக இருப்பது மனிதன் வாழும் இந்த பூமிதான். கழிவறுப்புக்குப் பக்கத்தில் கரு வளருவதைப் போல தீமைக்குப் பக்கத்தில்தான் இந்தச் சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது. பூமிப் பந்தில் எங்குப் பார்த்தாலும் குப்பைகள் குவிந்த வண்ணம் காணப்படுகிறது. அதிலும் மண்ணில் மக்காத பாலித்தீன் பைகளும் பிளாஸ்டிக் பொருள்களும் பூமியின் மேற்புறத் தோற்றத்தை அழுக்கு தேசமாக்கி காட்டுகின்றன.

"இந்த உலகில் எரியும் பிரச்சனைகளுக்கு மத்தியில் எரிக்க முடியாத பிரச்சனை குப்பை. மண்ணில் மக்கப் போகும் மனிதன் மண்ணில் மக்காத பிளாஸ்டிக்கையும் பெட்ரோலிய இலைகளையும் கண்டறிந்துவிட்டான்" (மூன்றாம் உலகப் போர், பக்.249-250)

பிளாஸ்டிக் பாலித்தீன் பை பொருள்களின் பயன்பாட்டு கழிவுகளால் மண்ணின் தரமும் அதன் திடத்தன்மையும் சீர்குலைகின்றன. மேலும் நிலத்தடி நீர் குறைகிறது. இதனால் மக்கள் அனைவரும் மக்காத பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து புவி மாசுபடுதலைத் தடுக்க வேண்டும் என்பதை இஷிமுரா பாத்திரம் மூலம் உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார் நாவலாசிரியர் வைரமுத்து.

காற்று மாசுபாடு

வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகைகள். தொழிற்சாலைப் புகைகள் மனிதர்கள் குப்பைகளை எரிப்பதினால் உண்டாகும் புகைகள் போன்றவற்றால் காற்றானது அதிக அளவில் மாசுபாடு அடைகிறது. இதனால் மனிதர்களின் சுவாசமும் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. **"ஆண்டுக்கு இருநூறு மில்லியன் டன் கார்பன் மோனாக்ஸைடும், ஐம்பது மில்லியன் டன் ஹைட்ரோ கார்பனு, நூற்றைம்பது மில்லியன் டன் சல்பர் டை ஆக்ஸைடும், நூற்றுத் தொண்ணூறு மில்லியன் டன் சாம்பலும் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது" (மூன்றாம் உலகப் போர், ப.55)** இவ்வாறு காற்றில் கலப்பதால் காற்று பெருமளவு பாதிக்கப்படுவதோடு ஓசோன் மண்டலம் எனப்படும் காற்றடுக்கு படலம் கிழிந்து அதன் வழியாக சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் பூமியிலுள்ள

உயிரினங்களை நேரடியாக பாதிப்படையச் செய்கிறது. ஆகவே மக்கள் காற்றும், காற்றுமண்டலமும் பாதிக்காத வாழ்க்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும் என எமிலி பாத்திரம் மூலம் தன் நாவல்வழி வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

புவி வெப்பமயமாதல்

புவியானது அதிகளவில் வெப்பமடைந்து வருகிறது. இதற்கு முழுமுதற் காரணம் மனிதன் ஏனெனில், காடுகளையும் மரங்களையும் வெட்டி தன் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறான். மேலும் மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகளும் பவி வெப்பமாதலுக்கு காரணமாகின்றன்றன. **"புவி வெப்பமாதலில் பருவநிலை மாற்றம் கண்டுவிட்டது. கடந்த நூற்றாண்டுகளில் இந்திய வெப்பநிலை 0.48 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கிறது". (மூன்றாம் உலகப் போர், ப. 308)**

புவிவெப்பம் இனிமேலும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் ஐரோப்பாவின் ஒரு பகுதியும் மத்திய கிழக்கின் பெரும்பகுதியும் வாழ்தகுதி இழந்த போகும் நிலை உண்டாகும்.

> **"புவிவெப்பம் கூடிக் கொண்டே இருக்கிறது. ஒரு டிகிரி வெப்பம் கூடியதற்கே சில பறவை இனங்களும் கம்பளித்தோல் கொண்ட விலங்கினங்களும் பூமியை விட்டே போய்விட்டன. புவி வெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டிருக்கிறது" (மூன்றாம் உலகப் போர், ப.55)**

நாளுக்கு நாள் உயரும் புவிவெப்பம் காரணமாக பறவைகளும் விலங்குகளும் அழிந்துவிட்டன. இன்னும் இந்நிலை நீடித்தால் மண்ணில் மனித இனமும் இல்லாமல் போகும் நிலை வந்துவிடும் என்று ஏமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

புவிவெப்பத்தின் விளைவுகள்

புவி வெப்பத்தின் காரணமாக எதிர்பாராத பல நிகழ்வுகளும் விளைவுகளும் ஏற்பட்டுவிட்டன. **"ஆர்கன்சாஸ் மாநிலத்தில் தலைக்கு மேலே பறந்த ஐயாயிரம் பறவைகள் பொத்தென்று தரையில் விழுந்து செத்தான். ரஷ்யாவில் நீராடப்போன பலர் சூடு தாங்காமல் நீர்நிலைகளில் செத்து மிதந்தனர். விஸ்காஸின் நகரத்தில் மேய்ந்து கொண்டிருந்த சிலநூறு பசுக்கள் சூடுதாங்காமல் ஒரேநேரத்தில் இறந்து போயின" (மூன்றாம் உலகப் போர், ப.56)** இவ்வாறு திடீரென்று அதிகரித்த புவிவெப்பத்தால் பறந்த பறவை.மேய்ந்த பசுக்கள்,நீராடச் சென்ற மனிதர்கள் அனைவரும் இறந்துபோன நிலையினை நாவலில் வரும் எமிலி பாத்திரம் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். மேலும்,

> **"உலகத்தின் பத்துகோடி மக்கள் கடல்மட்டத்திலிருந்து மூன்றடி உயர்த்தில்தானான் வாழ்கிறார்கள். புவிச்சூடு கட்டுப்படுத்தப்படாவிட்டால் இப்போதுள்ள கடல்மட்டம் மூன்றடி கூடும். இதனால் ஏழு கோடி மக்கள் இடம் பெயர நேரிடும் போயின" (மூன்றாம் உலகப் போர், ப. 192)**

அதிகரித்து வரும் பூவிசூட்டினால் பனிப்பாறைகள் வேகமாக உருகிவருகின்றன.இதனால் கடல் மட்ட உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. மேன்மேலும் கடல் மட்டம் உயர்ந்தால் மக்கள் இடம்பெயர நேரிடுவதோடு மக்கள் தொகைப் பெருக்கமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் மிகுதியாக ஏற்படும். எனவே, புவிச்சூடு அதிகரிக்காமல் கட்டுப்படுத்த மக்களோடு அரசும் இணைந்து நடவடிக்கைகள்

மேற்கொள்ள வேண்டும் என இஷிமுரா பாத்திரத்தின் மூலமாக புவிவெப்பத்தில் விளைவுகளைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

புவிவெப்பத்தின் எதிர்கால நிகழ்வுகள்

புவிவெப்ப அதிகரிப்பதால் மக்கள் இதுவரை சந்தித்திராத மோசமான விளைவுகளை சந்திக்கப் போகின்றனர்.

"2100 -ல் உலகின் சராசரி வெப்பநிலை 1.3 டிகிரி செல்சியஸிலிருந்து 5.8 டிகிரி செல்சியஸாக உயரக்கூடும். வெப்பநிலை ஏற்றத்தாழ்வால் பசிப்பிக் பெருங்கடலில் ஒரு காற்றுப்பிழை நேராப்போகிறது. கிழக்கு மேற்கு என்று வீசிவந்த காற்று, மேற்கு கிழக்கு என மாறப்போகிறது. காற்று பிழையினால் தெற்காசியாவையும் இந்தியாவையும் மழை மறுக்கப் போகிறது போயின" (மூன்றாம் உலகப் போர், ப.187)

வெப்பசலன கூடுதலால் காற்றுவீசும் திசைகள் மாறுபட்டு மழையின்வரத்து குறைந்து விவசாயம் மற்றும் குடிப்பதற்கும் நீரின்றி மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகப் போகிறார்கள். ஆகையால் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி புவியின் வெப்பத்தை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் இயற்கையோடு போராட வேண்டும் என்று எமிலி பாத்திரம் இந்நாவலில 'இந்திய வேளாண்மையில் உலகத்தாக்கம்' என்ற கருத்தரங்கில் பேசுவதன் மூலம் புவிவெப்பம் குறித்து மக்கள் அனைவரையும் விழிப்படைய செய்திருக்கிறார் நாவலாசிரியர.

புவிவெப்பம் தடுக்கும் முறைகள்

புவிவெப்பம் தடுக்கவும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தவும் பின்வரும் முறைகளை மக்கள் அனைவரும் கைக்குள்ள வேண்டும் என எமிலி பாத்திரம் குறிப்பிடுகின்றது.

"பூமியை மரங்களால் நிரப்புவோம், மரங்களெல்லாம் புவிவெப்பத்திற்கு எதிராய் கை தூக்கிப் போராடும் போராளிகள். மரங்களின் சிறக்கடியில் ஊர் பத்திரமாகப் பாதுகாக்கப்படட்டும். புவிவெப்பத்திற்கு எதிராக மனிதன் தொடுக்கும் முதல்போர் இதுவாக இருக்கட்டும்" (மூன்றாம் உலகப் போர், பக்.341-342).

மனிதர்கள் காடுகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்.புதிய பல மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல் வேண்டும். அப்போதுதான் பவிச்சூடு குறையும் நிலை உருவாகும்.

இயற்கை வளம் பாதுகாத்தல்

இயற்கை வளங்களான மலைகள்,ஆறுகள், காடுகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். **"மேற்கு தொடர்ச்சி மலையைக் காப்பது அவசியமாகும். இந்தியாவில் அறுபது சதவீதம் நனைக்கும் நதிகள் மேற்கு தொடர்ச்சி மலையிலேதான் ஊற்றெடுக்கின்றன" (மூன்றாம் உலகப் போர், ப.286)**

மலையின் மேலுள்ள மரங்களை வெட்டுவதால் மலையின் உயரம் குறைகிறது. மலையின் உயரம் குறையுமானால் மழையின் அளவும் குறையும் ஆகவே மலையை பாதுகாக்க வேண்டும் என சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். மேலும் **"இந்திய நதிகளை இணைப்பது இருக்கட்டும் முதலில் நதிகளை வாழவிடுங்கள். மழையைக் காப்பாற்றுங்கள். மழையைக் காப்பாற்றலாம். முப்பத்தொரு விழுக்காடு காடுகள் இருக்க வேண்டிய தேசத்தில் இருபத்தைந்து விழுக்காடுதான் உள்ளன" (மூன்றாம்**

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

உலகப் போர், ப.31) எனவே சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்கவும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தவும் முதலில் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்மென எமிலி பாத்திரம் மூலம் விளக்கியுள்ளார் வைரமுத்து.

விவசாயிகள் நிலை

கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலாளிகளின் சிக்கல், வாழ்வியல் பிரச்சனைகள் ஆகியவற்றைக் குறித்து கதையாசிரியர் தன்நாவலில் வரும் பாத்திரங்கள் மூலம் விளக்குகிறார்.

> **"மழை யில்ல வயித்துல ஈரத்துணிய கட்டி படுத்திருக்கான் விவசாயி. வெளச்சல் இருந்தா வெலை இருக்காது.வெலை இருந்தா வெளச்சல் இருக்காது. காசு இருந்தா ஆள் கிடைக்காது. ஆள் கிடைச்சா காசு இருக்காது கரண்ட் இருந்தா தண்ணி இருக்காது. தண்ணி இருந்தா கரண்டு இருக்காது. எடஞ்சல் மேல எடஞ்சலாகிப் போச்சுப்பா கலப்பை புடிச்சவன் பொழப்பு" (மூன்றாம் உலகப் போர், பக்.24-25)**

என்ற கிராம மக்களான கெடாவீரன், பரமனாண்டி, ஒத்தவீட்டு மூளி போன்ற பாத்திரங்களின் மூலம் விவசாய தொழிலுக்குண்டான சிக்கலை குறிப்பிடுகிறார் நாவலாசிரியர. மேலும், **"புவிவெப்பமாதல் உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரே நேரத்தில் விழுங்கப்படுகிறான். அவனது உற்பத்திப் பொருளின் விலையை பங்குச் சந்தைகளும், தங்குச் சந்தைகளும் தீர்மானிக்கின்றன" (மூன்றாம் உலகப் போர், ப.57)** பொருளை உற்பத்தி செய்பவனுக்கு அதன் விலையை நிர்ணயம் செய்ய உரிமை இல்லை என்கிற நிலையை எமிலி பாத்திரம் நாவலில் எழுதியுள்ள கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். **"துருவங்கள் உருகின்றன. பருவங்கள் மாறுகின்றன. காலம்காலமாய் விவசாயிகள் கொண்டிருந்த மரபுசார் அறிவை மறுதலிக்கிறது இயற்கை" (மூன்றாம் உலகப் போர், ப.56)** விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் இயற்கை காரணிகளிலும் அவ்வபோது துன்புறுத்தப்படுகின்றனர் என்னும் நிலையினை எமிலி பாத்திரம் மூலம் நாவலாசிரியர் கூறுகிறார்.

கல்வி

படிப்பின் வாசம் அறியாத விவசாயி கருத்தம்மாயி தன் மகன் சின்னபாண்டியிடம் **"என்னோட ஒழியட்டும்டா மகனே இந்த மண்ணோட மாரடிக்கிற பொழப்பு. நீயாச்சும் நகரத்துல அழுக்கு ஒட்டாம நாலெழுத்துப் படிச்சு நல்ல பொழப்பு பொழச்சுக்க" (மூன்றாம் உலகப் போர், ப.69)** என்று கல்வியும், கல்வியறியும் வாய்க்கப்பெறாத கருத்தமாயி பாத்திரம் மூலம் கல்வியின் தரம், முக்கியத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார். நாவலாசிரியர்.மேலும் விவசாய தொழில் செய்யும் ஏழை மக்கள் கடன் வாங்கி தன் பிள்ளைகளை படிக்க வைக்கும் நிலையினை இந்நாவலில் காணமுடிகிறது. **"முருகராசு பழைய பத்திரம் மேல ஒருலட்சரூவா எச்சா குடுத்திங்க்கன்னா என் சின்னப்பயல அமெரிக்காவுல ஒரு படிப்பு படிக்கவச்சு அழகு பாத்திருவேன்" (மூன்றாம் உலகப் போர், ப. 362)** என்று கருத்தம்மாயி பாத்திரம் கூறுவதன் மூலம் கடன்பட்டாவது நல்ல கல்வியை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்னும் கருத்தை வெளிப்படுத்தி உள்ளார் கதையாசிரியர் வைரமுத்து.

ஏழ்மை

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

விவசாய மக்கள் தொழில்புரிய கையில் பணமின்றி துன்பப்படும் நிலையினை குறிப்பிடுகிறார். **"விதைக்கடலைக்கு காசில்ல.நான் இருக்கேன்னு கூப்பிடுது காதுல ஆடுன பொண்டாட்டி தண்டட்டி அடகு வச்சு கடலை நட்டாசு. மழையைக் காணோம். நட்டமாச்சு. ஐப்பசியில் நல்லமழை நெல்லு நடலாமுனு உழுது பரம்படிச்சாரு சீனிச்சாமி. தச கூலிக்கு அடகு வச்சாரு அண்டாவ. பத்தல தன் மகளிடம் உன் கால்கொலுசக் கொடுத்தாயி! அப்பன் வட்டிபோட்டு வளவி தாரேன்" (மூன்றாம் உலகப் போர், ப.33)** இதைப் போலவே பெரும்பாலான விவசாயிகள் கையில் முதலீடு இல்லாமல் கடன்வாங்கியும் கையில் இருக்கும் பொருளை அடகு வைத்தும் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் ஏழ்மை நிலையினை சீனிச்சாமி பாத்திரம் மூலம் படம்பிடித்து காட்டியுள்ளார் நாவலாசிரியர். மேலும்,

> **"நிலத்த நான் விக்க நெனக்கலப்பா.அதுதான் என்னைய விக்கப்பாக்குது. வலுத்தவன் வாழை போடு எளைச்சவன் எள்ளு போடுன்னு சொலவம் இருக்கு நான் எளைச்சவன் தெரியாம வாழை போட்டுட்டேன். வெட்டி விக்கிற நேரத்துல காத்துல எல்லாம் சரிஞ்சுப் போச்சு இப்ப இத்து போயி நிக்கறேன்" (மூன்றாம் உலகப் போர், ப. 170)**

இனி திரும்பவும் கடன் வாங்கி விவசாயம் செய்வதற்கு உடலில் வலுவு இல்லை. அதனால் நிலத்தை விற்கப் போகிறேன் என்று கூறுகின்ற பரமனாண்டி கதாபாத்திரம் மூலம் அவனது ஏழ்மை நிலையினையும்

> **"மயில் தோகை மாதிரி வந்த கரும்பு, குக்கு நோவு வந்த கோழியா ஒக்காந்திருச்சு. இது அஞ்சாவது கடனய்யா ,இதுக்கு மேல தாங்க வலுவு இல்ல விக்கிறத தவிர வேற வழியில்லை" (மூன்றாம் உலகப் போர், ப.171)**

என்று கூறும் கெடாவீரன் பாத்திரம் மூலம் அவனது ஏழ்மைநிலையினையும் தன் நாவலில் வெளிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

தற்கொலை

ஊரையே சிரிக்க வச்சவன் ஊரையே அழுகவிட்டுட்டுப் போயிட்டானப்பா.

> **"மூணு வெள்ளாமை ஏய்ச்சுட்டுப் போயிருச்சப்பா பொன்னுசாமிய கடைசியா மகவீட்டுல போயி நகையை வாங்கி அடகு வச்சு விவசாயம் பண்ணினான். கருது தொண்டையில நிக்குது. குழைநோயி வந்து பயிரு நாறிப்போச்சு. அடகு வச்ச நகைய திருப்பி கேட்ட மருமகன் கெட்ட வார்த்தை கேட்டுப்புட்டான். கடைசியா பூச்சிக்கு வச்சிருந்த மருந்த அடிச்சிட்டு படுத்துட்டான். பூச்சிய கொல்லாத மருந்து பொன்னுச்சாமிய கொன்னுருச்சு" (மூன்றாம் உலகப் போர், ப.100)**

விவசாயம் நட்டம், கடன் பிரச்சனை போன்றவற்றால் மனம்முடைந்த பொன்னுசாமி விஷம் குடித்து இறந்து போன நிலையை வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்து கூறும் சிவங்காளை பத்திரம் மூலம் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்த பொன்னுசாமியின் நிலையே அனைத்து விவசாய மக்களுக்கும் பொருந்துவனவாக படைத்துள்ளார்.

> **"மண்ணே மாறிப்போச்சப்பா. ஒண்ணுத் தொண்ணூறா வெளையிற மண்ணு சத்து இல்லாத சவமாப் போச்சு: வெளவு கொறஞ்சுப் போச்சு: செலவு கூடிப்போச்சு: வெல சுருங்கிப் போச்சு: இன்னைக்குப் பசை உள்ளவன்தான் விவசாயம் பண்ண முடியும்" (மூன்றாம் உலகப் போர், ப.102)**

என்று விவசாயத்தின் இன்றைய நிலையினை கருத்தமாயி பாத்திரம் மூலம் பதிவு செய்துள்ளார் நாவலாசிரியர்.

குடிப்பழக்கம்

விவசாய தொழில் செய்யும் மக்கள் மதுவிற்கு அடிமையாகி விட்டனர்.

"மதுக்கடை வாசல்களில் செத்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயத் தொழிலாளிகள் தவணைமுறையில். பெரும்பாலும் மேட்டுக்குடி மக்கள் மதுவை அருந்துகிறார்கள். ஆனால் உழைக்கும் மக்களை மது அருந்துகிறது. அவர்களின் அன்றாட உணவுப் பணத்திலும் கைவைக்கிறது" (மூன்றாம் உலகப் போர், ப.134)

காலையில் உழைக்கத் தொடங்கும் மனிதன் உழைத்து, இளைத்து மாலையில் வீடு திரும்புகிறான்.உடல் அசதிக்கு அது மருந்தென மூடப்பழக்கத்தில் வாழப் பழகியவன் மதுக்கடையின் வாசல்களில் மண்டியிடுகிறான்.உழைத்து இளைத்தவன் மதுப்பழக்கத்தால் உள் உறுப்புகளையும் இழக்க்கிறான். இவ்வாறு விவசாய மக்கள் மதுவிற்கு அடிமையாகும் நிலையினை நாவல்வழி சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் வெளிக்காட்டியுள்ளார் நாவலாசிரியர் வைரமுத்து.

அரசு தரும் இலவசம்

அரசு தருகின்ற இலவசத்தால் மக்கள் சோம்பேறிகளாகிவிட்டனர். விவசாய தொழில்புரியும் கிராம மக்கள்,

"சாராயத்திலும், தொலைக்காட்சியிலும், இலவசத்திலும் கிறங்கி கிடக்கிறார்கள். இலவசத்தில் வாழப் பழகியவர்கள் மதுரசத்தில் மூழ்கிப் போனார்கள். ஊனமுற்றோர், முதியவர்கள், அனாதைக் குழந்தைகள்,ஆதரவற்ற நோயாளிகள் இவர்களுக்குத் தானே இலவசம் பொருந்தும். உற்பத்தி பெருக்காத இலவசம் உற்பாதம்தானே விளைவிக்கும்" (மூன்றாம் உலகப் போர், பக்.132-134)

அரசு அள்ளித்தரும் இலவசத்தில் வாழப்பழகிய உழைப்பாளிகள் உழைப்பை மறந்து விட்டனர். உழைத்த தலைமுறை உளுத்த தலைமுறையாக்க ப்பட்டு விட்டது என சின்னபாண்டி பாத்திரம் மூலம் அரசின் நிலையும் மற்றும் உழைப்பாளிகளின் நிலையையும் கூறுகிறார் ஆசிரியர்.

நிலம் விற்கப்படுதல்

விவசாயிகள் தங்கள் நிலங்களை நீர்பற்றாக்குறை, மண் வளமின்மை,நிலத்திற்கு அதிக விலை போன்ற காரணங்களால் நிலங்களை விற்கும் விவசாயிப் போல சொள்ளையனும் தன் நிலங்களை விற்றுவிட்டு பிறகு

"நிலத்தை வித்துட்டு லோகமெல்லாம் சுத்திவந்த பராரி நாயி நானு. படிச்சவனும் வேற தொழில் தெரிஞ்சவனும் ஊருவிட்டு ஊருபோயி பொழைக்கலாம்.

நம்மள மாதிரி விவசாய குடும்பத்துக்கு அது ஒத்து வராது. நிலத்த விக்காம இருந்திருந்தா என் மானமும் ரெண்டு பிள்ளைகளும் போயிருக்காது. நிலத்தை வித்து நொநது நூலெனப் போனவன் வெந்து வெதும்பி சொல்றேன் நிலத்த விற்காதீக" (மூன்றாம் உலகப் போர், பக்.298-299)

இன்றைய காலத்தில் விவசாய நிலங்களை விற்கும் விவசாயிகளுக்கு சொள்ளையன் பாத்திரம் மூலம் விளை நிலத்தை விற்கக் கூடாது என்னும் கருத்தை புலப்படுத்தி உள்ளார் நாவலாசிரியர்.

இயற்கை விவசாயம்

மக்கள் விவசாயத்திற்கு இயற்கையான உரங்களையே பயன்படுத்த வேண்டும்.

"இந்தியா கண்டடைந்த பெரிய தொழில்நுட்பம் இயற்கை விவசாயம். அதைத் தொலைத்து விட்டது இந்தியா. இந்திய மண் கொஞ்சம் கொஞ்சமாக கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. மண் ஈன்று கொடுப்பதெல்லாம் உள்ளிருக்கும் உயிர்தன்மையால்தான். அந்த உயிர்தன்மை இரசாயன உரமிட்டு கொல்லப்ப்படுகிறத இந்தியாவில் பன்னிரண்டு கிலோ மண்ணின் உயிர்த் தன்மை கொல்லப்பட்ட பிறகுதான் ஒரு கிலோ விளைகிறது" (மூன்றாம் உலகப் போர், ப.289)

ஆகவே விவசாயிகள் விவசாயத்திற்கு ஆடு மாடு முதலியவற்றின் எருக்களை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் மண்ணின் உயிர்த்தன்மை அழியாமல் அதிக விளைச்சல் பெறும். இதற்கு மக்கள் கால்நடைகளை பெருக்க வேண்டும்.

முடிவுரை

வைரமுத்துவின் 'மூன்றாம் உலகப் போர்' நாவலில் பல்வேறு சமுதாய சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனிதர்களின் சுற்றுச் சூழல்களில் முதன்மையாக கருதப்படும் நீலம், நீர், காற்று ஆகியவை மனிதர்களால் எவ்வாறு மாசுபடுகின்றன என்பதையும் புவி வெப்பமயமாதலின் காரணம், வெப்பமயமாதலால் உண்டான விளைவுகள், புவி வெப்பத்தின் எதிர்கால நிகழ்வுகள், புவிவெப்பம் தடுக்கும் முறைகள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளதுன. மேலும் விவசாயிகளின் பிரச்சனைகளில் முதன்மையாக இருப்பது நீர்த்தட்டுப்பாடு, நீரின்மையால் விவசாய முடக்கம். இதனால் உற்பத்தி குறைதல். விவசாயம் செய்வதற்கு முதலீடு இன்றி நிலங்கள் விற்கப்படுதல் அதிகமான இரசாயன உரங்களிடுவதால் மண்வளம் பாதிப்பு, இயற்கை விவசாயத்தின் அவசியம், பயன் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன. மக்களின் கல்வி நிலை, ஏழ்மை, குடிப்பழக்கம், விவசாய நஷ்டம் மற்றும் கடன் மட்டபிரச்சனைகளால் தற்கொலை செய்து கொள்ளும் நிலை போன்றவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

நிலங்களைக் காப்போம்

வளமாக வாழ்வோம்!

குறிப்புச்சொற்கள்

[1] கைலாசபதி.க. *தமிழ் நாவல் இலக்கியம்*. பாதிரி நிலையம், சென்னை -1, 1968.

[2] திருவள்ளுவர். *திருக்குறள் பரிமேலழகர் உரை*. சாரதா பதிப்பகம், சென்னை-600 014, 2002.

[3] மறைமலை.சி. இ. *இலக்கியக் கொள்கைகள்*. நீர்மலர் வெளியிட்டதகம், 5பி, எல்லப்ப நாயக்கன் தெரு, கோமணிசுவரன் பேட்டை,சென்னை -600 002, 1987.

[4] முத்துச் சண்முகம். *தமிழ் இலக்கியக் கோட்பாடு*. முல்லை நிலையம், சென்னை, 2003.

[5] வைரமுத்து. *மூன்றாம் உலகப்போர்*. சூர்யா வெளியீடு, சென்னை - 24, 2012.

References

[1] Kailasapathy.K, Tamil Novel Literature, Pathiri Station, Chennai - 1, First Edition - 1968.

[2] Kailasapathi, K. *Tamil Naval Ilakkiyam*. Pathiri Nilayam, Chennai-1, 1968.

[3] Thiruvalluvar. *Thirukkural Parimelalhagar Urai*. Saradha Pathippagam, Chennai-600014, 2002.
[4] Maraimalai, C. I. *Ilakkiya Kolkaigal*. Neermalar Veliyeettagam, 5B, Ellappa Nayakkan Street, Komaniswaranpettai, Chennai-600002, 1987.
[5] Muthuch Sanmugam. *Tamil Ilakkiya Kotpadu*. Mullai Nilayam, Chennai, 2003.
[6] Vairamuthu. *Moondram Ulagappoor*. Surya Veliyeedu, Chennai-24, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.
கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

தெற்காசியக் குழந்தைகளின் தொடர்புத்திறன்: உளவியல், நரம்பியல் மற்றும் சமூக கோணங்களில் ஆழமான ஆய்வு

A Comprehensive Psychological–Neurocognitive Analysis on Communication Development in South Asian Children

திருமதி. மதிவதனி திருமலை, தமிழ் எழுத்தாளர், சூரிச், சுவிட்சர்லாந்து.
Mrs. Mathivathani Thirumalai, Tamil Writer, Zurich, Switzerlznd.

Abstract

A child's ability to speak, listen, comprehend, and respond forms the foundation of communication skills. These skills are not limited to linguistic competence alone; they are deeply rooted in the child's brain development, emotional stability, social identity, self-confidence, and overall personality formation. Communication functions as a critical psychological tool through which children interpret the world and engage meaningfully with their surroundings. In the South Asian context—including Sri Lanka, India, Pakistan, Bangladesh, and Nepal—children's communication development is profoundly shaped by cultural, familial, educational, and social environments. Factors such as academic pressure, evolving family structures, urban lifestyles, increasing exposure to digital technologies, and deeply embedded social traditions exert distinctive influences on children's communicative abilities. Psychological and neuroscientific studies consistently emphasize that communication is central to holistic child development, serving as a key mechanism for cognitive growth, emotional regulation, and social interaction. Effective communication enhances neural connectivity, supports emotional resilience, and fosters adaptive social behavior. In this context, communication skills emerge as both a developmental outcome and a driving force in a child's overall growth. Therefore, this study proposes a multidimensional examination of children's communication skills within the South Asian milieu, integrating psychological, neuroscientific, and socio-cultural perspectives to understand how communication functions as a core component of healthy childhood development.

Keywords: Comprehensive Psychological–Neurocognitive Analysis, Communication Development, South Asian Children.

ஆய்வுச்சுருக்கம்

ஒரு குழந்தை பேசும் முறை, கேட்கும் திறன், கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் விதம் மற்றும் அதற்குத் தகுந்த பதிலளிக்கும் ஆற்றல் ஆகியவை ஒன்றிணைந்து அதன் தொடர்புத்திறனை உருவாக்குகின்றன. இந்தத் தொடர்புத்திறன் மொழிப்பயிற்சியாக மட்டும் சுருக்கப்படுவதல்ல; அது குழந்தையின் மூளை வளர்ச்சி, உணர்ச்சி சமநிலை, சமூக அடையாளம், தன்னம்பிக்கை மற்றும் முழுமையான ஆளுமை வளர்ச்சியின் அடிப்படையாக அமைந்துள்ளது. குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகை உணரவும், சமூகத்தில் பொருத்தமான முறையில் செயல்படவும் தொடர்புத்திறன் ஒரு முக்கியமான உளவியல் கருவியாக விளங்குகிறது. தெற்காசியச் சூழலில்—இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில்—குழந்தைகளின் தொடர்புத்திறன் வளர்ச்சி பல்வேறு கலாச்சார, குடும்ப, கல்வி மற்றும் சமூக காரணிகளால் ஆழமாக வடிவமைக்கப்படுகிறது. கல்விசார் போட்டி அழுத்தங்கள், குடும்ப அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள், நகர்மயமாதல், டிஜிட்டல் சாதனங்களின் அதிகரித்த பயன்பாடு மற்றும் சமூக மரபுகள் ஆகியவை

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

குழந்தைகளின் தொடர்பு நடைமுறைகளில் தனித்துவமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உளவியல் மற்றும் நரம்பியல் ஆய்வுகள், குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தொடர்புத்திறன் ஒரு அத்தியாவசிய உளவியல் வளமாக இருப்பதை வலியுறுத்துகின்றன. இத்தகைய பின்னணியில், இந்த ஆய்வு தெற்காசிய சூழலில் குழந்தைகளின் தொடர்புத்திறனை உளவியல், நரம்பியல் மற்றும் சமூகக் கோணங்களில் ஒருங்கிணைந்த வகையில் ஆராய முனைகிறது.

குறிப்புச்சொற்கள்: தெற்காசியக் குழந்தைகளின் தொடர்புத்திறன், உளவியல், நரம்பியல் மற்றும் சமூக கோணம், ஆழமான ஆய்வு.

முன்னுரை

ஒரு குழந்தை மனிதர்களுடன் எப்படி பேசுகிறது, கேட்கிறது, புரிகிறது, மற்றும் பதிலளிக்கிறது இவை எல்லாம் அவரது தொடர்புத்திறனை உருவாக்குகின்றன. ஆனால் இந்தத் திறன் ஒரு சாதாரண மொழித் திறனாக மட்டும் இல்லை; அது குழந்தையின் மூளை வளர்ச்சி, உணர்ச்சி அமைதி, சமூக அடையாளம், தன்னம்பிக்கை மற்றும் ஆளுமை ஆகியவற்றின் அடித்தளமாக உள்ளது. தெற்காசிய சூழலில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் நேபாளம்—இந்த தொடர்புத்திறன் பல்வேறு கலாச்சார, குடும்ப, பள்ளி மற்றும் சமூக காரணிகளால் ஆழமாக வடிவமைக்கப்படுகிறது. கல்வி அழுத்தம், குடும்ப அமைப்பு மாற்றங்கள், நகர்ப்புற வாழ்க்கை, டிஜிட்டல் சாதனங்கள், சமூக மரபுகள் போன்றவை குழந்தையின் தொடர்புத்திறனில் தனித்துவமான தாக்கங்களை உருவாக்குகின்றன. உளவியல் மற்றும் நரம்பியல் ஆய்வுகள் கூறுவது ஒன்றே, 'தொடர்புத்திறன் என்பது குழந்தை முழுமையாக வளர்வதற்கான மிக முக்கியமான உளவியல் கருவி'.இதனால் இந்த ஆய்வு தெற்காசிய சூழலுக்கான உளவியல், நரம்பியல் மற்றும் சமூக ரீதியான பல்தளப் பரிசீலனையை முன்வைக்கிறது.

உளவியல் அடித்தளங்கள்: அறிவாற்றல் வளர்ச்சி மற்றும் மொழி வடிவமைப்பு

ஜீன் பியாஜேவின் அறிவாற்றல் வளர்ச்சிக் கோட்பாடு (Piaget, 1952) 2–7 வயது குழந்தைகள் "முன்கட்டமைப்பு நிலையில்" (Pre-operational stage) குறியீட்டுச் சிந்தனையை (symbolic thinking) உருவாக்குவதாக கூறுகிறது. இந்த காலகட்டம் மொழி–கருத்து அமைப்பு உருவாகும் முக்கியமான பருவமாகும். இந்நிலையில், குழந்தைக்கு தொடர்புத்திறன் என்பது:

- **நினைவாற்றல் கட்டமைப்பு**
- **கருத்துகளை ஒழுங்குபடுத்தும் திறன்**
- **கற்பனை–செயன்முறை இணைப்பு**
- **சிந்தனைக்கு மொழியின் ஆதரவு**

இவை அனைத்தும் மூளைச் செயல்பாட்டுடன் இணைந்த வளர்ச்சி நிலைகளாகும்.

- **பெரிய வகுப்பறைகள்**
- **ஒருதிசைக் கற்றல் (teacher-dominated learning)**
- **கேள்விகளை கேட்க அனுமதிக்காமை**
- **மதிப்பெண் மைய - கல்விக் கலாச்சாரம்**

ஆகியன தெற்காசியச் சூழலில் குழந்தைகளுக்கு மிகப்பெரும் தடைக்கற்களாக அமைந்துள்ளன. இதனால் குழந்தையின் சிந்தனை–மொழி இணைப்பு பல நேரங்களில் நிறைவடைவதில்லை.

நரம்பியல் கோணம்: மூளை அமைப்பு, மொழி வளர்ச்சி மற்றும் தொடர்பு செயல்முறைகள்

நரம்பியல் ஆய்வுகள் (Gazzaniga, 2018; Sowell et al., 2017) கூறுவது: மொழிக்குப் பொறுப்பான முக்கிய மூளைப் பகுதிகள்.

1. **Broca's Area - பேசும் மொழியை உருவாக்குதல்**

2. **Wernicke's Area - மொழி அர்த்தத்தை புரிதல்**
3. **Prefrontal Cortex - சமூக ஒழுங்கு, உணர்ச்சி கட்டுப்பாடு, தன்னம்பிக்கை**
4. **Amygdala - பயம், கோபம், உணர்ச்சி பதில்**
5. **Hippocampus - நினைவக உருவாக்கம்**

இத்தகைய நிலையில்தான் மூளைப்பகுதிகள் தங்களுக்கான பனிகளைச் செய்கின்றன.

நரம்பியல் உண்மை

பாதுகாப்பான, அன்பான, உரையாடல் நிறைந்த சூழல் குழந்தையின் மூளையை உடலியல் ரீதியாக வலுப்படுத்துகிறது. மாறாக,

- **மனஅழுத்தம்**
- **கல்வி அழுத்தம்**
- **விமர்சனம்**
- **கேள்விகளைத் தடுத்தல்**

இவை அனைத்தும் 'அமிக்டலா' (Amygdala) -வை செயல்படுத்தி, தொடர்புத் தைரியத்தைக் குறைக்கின்றன. 'அமிக்டலா' என்பது மனிதனின் மூளையில் உள்ள ஒரு முக்கியமான பகுதி. இது ஒவ்வொரு பெருமூளை அரைக்கோளத்திலும் (left & right hemisphere) உள்ளது. பாதாமைப் போல வடிவம் உள்ளதால் இதற்கு *Amygdala* (Greek: almond) என்று பெயர். இது சாம்பல் நிறப் பொருளால் (grey matter) ஆன ஒரு கட்டி(cluster of nuclei). அமிக்டலா முக்கியமாக உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் உதவுகிறது.

அமிக்டலா கையாலும் முக்கிய உணர்ச்சிகள்:

- **பயம் (fear)**
- **கோபம் (anger)**
- **மகிழ்ச்சி (pleasure)**
- **ஆச்சரியம் (surprise)**
- **உள்ளுணர்வு நினைவுகள் (emotional memories) – குறிப்பாக பயம் சம்பந்தமானவை.**

ஒரு சம்பவத்தை நீங்கள் உணரும்போது, அது ஆபத்தானதா, பாதுகாப்பானதா என்பதை முதலில் அமிக்டலா சோதிக்கும். ஆபத்து என நினைத்தால், உடனடியாக 'fight or flight' பதிலை ஏற்படுத்தும். உணர்ச்சிகளை நினைவில் வைத்துக்கொள்ளவும் உதவுகிறது (எ.கா: ஒரு பெரிய பயமுறுத்தும் அனுபவத்தைக் கவனமாக நினைவில் வைத்திருப்பது). இவ்வாறு அமிக்டலா வேலை செய்கிறது.

உணர்ச்சி கட்டுப்பாடு மற்றும் தொடர்புத்திறன்

Carl Rogers (1961) கூறியபடி, **"நிபந்தனையற்ற அன்பு மற்றும் பாதுகாப்பான சூழல் கிடைத்தால் மட்டுமே குழந்தை தன்னை வெளிப்படுத்தத் துணியும்."** தெற்காசிய சூழலில், கல்வி அழுத்தம் மற்றும் சமூக ஒப்பீடு குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டை கட்டுப்படுத்துகிறது.

விளைவுகள்:

- **பேசும்போது தடை**
- **விமர்சனப் பயம்**
- **கோபம் அல்லது ஒதுங்கல்**
- **நம்பிக்கை குறைவு**
- **தொடர்புத் தவிர்ப்பு**

உணர்ச்சி கட்டுப்பாடு குறைவாக இருந்தால், சமூக நடைமுறைகள், உரையாடல் முறைகள் அனைத்திலும் சிக்கல்கள் உருவாகும்.

சமூக–கலாச்சார சூழல்: தெற்காசிய தொடர்புத்திறனின் பல்தள அழுத்தங்கள்

முக்கிய கலாச்சார முனைப்புகள்:

1. **மரியாதை–அடக்கமான பேச்சு (Hierarchy-based communication)**
2. **வயது அடிப்படையிலான அமைப்பு**
3. **மொழிபெயர்ப்பு பொறுப்பு (children translating for parents in migrant families)**
4. **பெற்றோர் கட்டுப்பாடு மைய குடும்பம்**
5. **குழந்தையின் கருத்து கேட்பதில் குறைவு**

இவை குழந்தையின் பேச்சு தைரியத்தை கட்டுப்படுத்தும்.

நகர்ப்புற வித்தியாசங்கள்:

- **டிஜிட்டல் அடிமை**
- **நேரடி சமூக அனுபவக்குறைவு**
- **குடும்பத்தினரின் பேசும் நேரக்குறைவு**

கிராமப்புற வித்தியாசங்கள்:

- **வளங்கள் குறைவு**
- **உளவியல் வழிகாட்டல் இல்லாமை**
- **மொழி வளர்ச்சியை ஊக்குவிக்கும் reading culture இல்லாதமை**

தெற்காசியச் சூழலில் காணப்படும் முக்கிய சவால்கள்

குடும்ப சவால்கள்

- **பெற்றோரின் வேலை அழுத்தம்**
- **விவாகரத்து, குடும்ப பிரிவு**
- **குழந்தைகளுடன் உரையாடல் குறைவு**

பள்ளி சவால்கள்

- **பெரிய வகுப்புகள்**
- **போட்டி மைய கல்வி**
- **கேள்விகளை கேட்க அனுமதி குறைவு**

சமூக சவால்கள்

- **டிஜிட்டல் சாதனங்கள்**
- **சமூக ஒப்பீடு**
- **புலம்பெயர் குடும்ப மாற்றங்கள்**

நாடுகளில் காணப்படும் கற்பித்தல் முறைகள்

உலகில் பல நாடுகள் கற்பித்தல் வழி குழந்தை உளவியலை மையப் படுத்தி கற்பித்தல் முறைகளை வகுத்துள்ளன. இதில் சில நாடுகளின் நெறிமுறைகளைக் காண்போம்.

பின்லாந்து

- **தேர்வுகள் இல்லை**
- **மதிப்பெண்–போட்டி மையமல்ல**
- **ஆர்வம்–அறிமுகம்–விளையாட்டு மையக் கற்றல்**
- **குழந்தை மனநல முன்னுரிமை**

ஜெர்மனி & சுவிற்சர்லாந்து

- **Vocational/Dual System**
- **நடைமுறை திறன் + வகுப்பறை கற்றல்**
- **திறன்களுக்கான மரியாதை**
- **குழந்தையின் தனித்திறன் அடையாளம் வலுப்படும்**

தொடர்புத்திறனை மேம்படுத்தும் உளவியல் வழிமுறைகள்

1. **பாதுகாப்பான உரையாடல் சூழல்**
   கேள்விகள் கேட்க ஊக்குவித்தல், குற்றம்சாட்டாத செவிகொடுத்தல்.
2. **உணர்ச்சி அங்கீகாரம்**
   "நீ வருந்துகிறாய்… அதை நான் கவனிக்கிறேன்."

3. **விளையாட்டு சிகிச்சை (Play Therapy)**
   கலை, கதை, உருவக விளையாட்டுகள் மூலம் மொழி–உணர்ச்சி வெளிப்பாடு.
4. **கதை சொல்லுதல் & வாசிப்பு கலாச்சாரம்**
   இது மொழி மற்றும் கற்பனை வளர்ச்சிக்கு முக்கியம்.
5. **செயல்விளைவு கேட்புத் திறன்**
   குழந்தைக்கு பேசும் உரிமை உள்ளது என்ற உணர்வு வழங்கல்.
6. **குடும்ப–பள்ளி இணைப்பு**
   புதிய தலைமுறை குழந்தைகளுக்கு இது மிகவும் அவசியமானது.

முடிவுகள்

தெற்காசிய குழந்தைகளின் தொடர்புத்திறன் வளர்ச்சி என்பது ஒரு மொழித் திறன் மட்டுமல்ல; அது மூளை, உணர்ச்சி, சமூக மற்றும் ஆளுமை வளர்ச்சியின் முழுமையான உளவியல் பயணம் ஆகும். பியாஜே, வைகோட்ஸ்கி, ரோஜர்ஸ், பாண்டுரா ஆகியோர் அனைவரும் ஒரே கருத்தை வலியுறுத்துகின்றனர். குழந்தைக்கு அன்பான, பாதுகாப்பான, உரையாடல் நிறைந்த சூழல் கிடைத்தால் மட்டுமே அவர்களின் தொடர்புத்திறன் உண்மையான வளர்ச்சியை அடையும். தெற்காசிய நாடுகளின் கல்வி–குடும்ப–சமூக அமைப்புகள் இணைந்து குழந்தைகளுக்கான structured மற்றும் மனித நேயம் நிறைந்த உரையாடல் சூழலை உருவாக்கினால், அவர்களின் தொடர்புத்திறன் மட்டுமின்றி முழுமையான ஆளுமை வளர்ச்சியும் உறுதியானதாக மாறும்.

குறிப்புகள்

[1] காசனிகா, எம் .எஸ். *காக்னிடிவ் நியூரோசயன்ஸ் : தி பயாலஜி ஆஃப் த மைண்ட்*. 2018.
[2] ரோஜர்ஸ், சி .ஆர். *ஆன் பிகமிங் எ பர்சன்*. 1961.
[3] வைகோத்ஸ்கி, எல் .எஸ். *மைண்ட் இன் சொசைட்டி*. 1978.
[4] சோவெல், இ .ஆர்., பி .எம் .தாம்சன், மற்றும் ஏ .டபிள்யூ .டோகா. *மேப்பிங் ஹியூமன் பிரெயின் டெவலப்மெண்ட்*. 2017.
[5] பெரேரா, எச். *சைல்ட் டெவலப்மெண்ட் இன் சவுத் ஏஷியன் கான்டெக்ஸ்ட்ஸ்*. 2019.
[6] பியாஜே, ஜே. *தி ஆரிஜின்ஸ் ஆஃப் இன்டெலிஜென்ஸ் இன் சில்ட்ரன்*. 1952.

References

[1] Gazzaniga, M. S. *Cognitive Neuroscience: The Biology of the Mind*. 2018.
[2] Rogers, C. R. *On Becoming a Person*. 1961.
[3] Vygotsky, L. S. *Mind in Society*. 1978.
[4] Sowell, E. R., P. M. Thompson, and A. W. Toga. *Mapping Human Brain Development*. 2017.
[5] Perera, H. *Child Development in South Asian Contexts*. 2019.
[6] Piaget, J. *The Origins of Intelligence in Children*. 1952.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.
கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

வளங்குன்றா வளர்ச்சி நிலைக்குத் திருப்பாவைத் தத்துவங்கள்

Thiruppavai Philosophies towards Sustainable Development

முனைவர் இராம. பரிமளம், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
Dr. R. Parimalam, Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India.

Abstract

Wisdom, known as jnanam, refers to the higher knowledge through which one realizes the Divine. It is not merely intellectual understanding, but an inner realization rooted in true consciousness (meyyunarvu), through which one reflects upon the ultimate purpose and liberation of the world. Perceiving reality through this true knowledge is called semporul—the realization of the eternal truth. Therefore, the spiritual utterances of enlightened souls are revered as semporul kandar vaaichchol, words born from direct realization of truth. Such expressions are not theoretical teachings but lived experiences of divine awareness. Among those naturally endowed with this profound spiritual wisdom is Andal Nachiyar, one of the twelve Alvars. From an early age, Andal embodied divine consciousness and devotion, reflecting a rare fusion of wisdom and bhakti. Her hymns reveal deep metaphysical insight blended with intense love for the Divine, positioning her as a unique spiritual figure whose innate wisdom continues to guide seekers toward inner realization and liberation.

Keywords: Wisdom, Divine Consciousness, Andal Nachiyar, Spiritual Realization.

ஆய்வுச்சுருக்கம்

இறைவனை அறியக்கூடிய நல்லறிவிற்கு ஞானம் என்று பெயர். உள்ளுணர்வாகிய மெய்யுணர்வால் உலக ஈடேற்றத்தைப் பற்றிச் சிந்திப்பதும் ஞானம் ஆகும். இந்த மெய்யறிவைக் கொண்டு காண்பதே செம்பொருள் எனப்படும். எனவே தான் ஞானியருடைய உபதேச மொழிகளைச் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் என்பர். அத்தகைய மெய்ஞ்ஞானத்தை இயற்கையாகவே பெற்று வளர்ந்தவர் தான் பன்னிரு ஆழ்வார்கள் ஒருவரான ஆண்டாள் நாச்சியார்.

குறிப்புச்சொற்கள்: ஞானம், இறை உணர்வு, ஆண்டாள் நாச்சியார், ஆன்மீக அனுபவம்.

முன்னுரை

இறைவனை வழிபடுவதன் மூலம் தான், அவனது திருவடியில் கலக்கும் பேறு பெற முடியும் என்பதனை உணர்வதற்கே இறையருள் வேண்டும். **"புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"** என்று நம்மாழ்வார் திருவாக்கு அருளியுள்ளார். ஜீவன் என்று சொல்லக்கூடிய ஆன்மா கடைத்தேற இறைவனது பாதக்கமலங்களைப் பற்ற வேண்டுமென்பதை, **"உன் பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடத் நானெங்கும் காண்கின்றிலேன்"** என்று பெரியாழ்வாரும் பகர்கின்றார்.

இவ்வாழ்வார்களைப் போன்றே ஆண்டாளும், **"துன்பக் கடல்புக்கு வைகுந்தேன் என்பதோர் தோணிபெறாது உழல்கின்றேன்"** என்று அருளியுள்ளார். "ஆண்டாள் கண்ணன் மீது அளவற்ற காதல் கொண்டவர். அவர் இறைவன் பால் கொண்ட ஆழ்ந்த அன்பும், தேர்ந்த அறிவுத்திறமும் அவரை இலக்கியப்புலமை மிக்க சான்றோராகத் தமிழுலகிற்கு

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 1, January 2026 E-ISSN: 2584-167X

எடுத்துக்காட்டுகின்றன." (சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்,ப. ஏப்ரல் 2018, ப. 226).

ஆண்டாள் காலமும் இடமும்

திருப்பாவை முப்பதும் பாடியருளிய ஆண்டாள் திருவில்லிப்புத்தூரில் பிறந்த காலவரையறையை ஆராயப் புகுவதற்குத் திருப்பாவைப் பாடலே சான்றாக அமைகின்றது. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையான காலத்தை வரையறுக்கிறார்(9ஆம் நூற்றாண்டு) மு.ராகவையங்கார். "ஆண்டாளின் அவதார நாள் - நளவருடம் ஆடிமாதம் சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையும் கூடிய பூர நட்சத்திரம் என்று குருபரம்பரை நூல்கள் சில கூறுகின்றன. இக்காலக் குறிப்பைக் கொண்டு கி.பி. 776 ஆம் வருடம் ஜூன் மாதம் 25 ஆம் தேதியே ஆண்டாள் அவதார காலம் என்று திருவாளர் சுவாமிக் கண்ணுப்பிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள்." (*ப்ரணவ் ஜர்னல் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ்*, பக்கம் எண் 348)

"பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின்காண், போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே" (ஆண்டாள், திருப்பாவை, பா-13)

என்ற இப்பாடலில் ஆண்டாளின் உலகியல் அறிவையும், விலங்கியல் அறிவையும், வானியல் அறிவையும் ஒருசேர அறியமுடிகின்றது.

